விலை ரூபா 1-50

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 29 ஆடி 8 துல்ஹஜ்ஜா 27 இதழ் 151

யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 24-7-1987

## "தமிழீழ வரலாற்றில் 1983 ஜூலை 23 முக்கியமான ஒரு தினமாகும்"

யாழ்ப்பாணம், வெள்ளி

மறைந்து வாழும் ஒரு சில போராளிகளின் கெரில்லா யுத்தமாக ஆரம்பிக்கப்பட்ட எமது விடுதலைப்போராட்டம் வலிமைமிக்க நிரந்தரப்படையினை உருவாக்கி மக்கள் போராட்டமாக மலர்வதற்கு அத்திபாரமிட்டது 1983 ஜூலை 23ம் திகதி இரவு திருநல்வேலியில் நிகழ்த்தப்பட்ட தாக்குதலாகும். தமிழீழ வரலாற்றில் இத்தினம் முக்கியமானவொருதினமும், ஆயிரம் மேடைப்பேச்சுக்களை விட கெரில்லாத்தாக்குதல் மக்களை நம்பிக்கையூட்டி அணிதிரட்டும் என்ற மாபெரும் புரட்சியாளனின் கருத்தை மறுபடியும் ஒருமுறை மெய்ப்பித்த தாக்குதலாகும்.''

இவ்வாறு தமிழீழவிடுதலைப் புலிகள் விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ்வறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:

அன்றைய தாக்குதலிற்கான ஆயத்தங்களை செய்துகொண்டிருந்த வேளையில் சிறிலங்கா இனவெறி அரசினது கூலிப் படைகளால் கொல்லப்பட்ட சீலன், ஆனந்தன் ஆகிய விடுதலைப்புலிகளினதும் தாக்குதலிற்கு தலைமை தாங்கி களத்தில் வீரமரணமெய்திய செல்லக்கிளியினதும் தியாகங்கள் மறக்கப்பட முடியாதவை

இந்த நான்காண்டு காலப் பகுதியில் எமது போராட்டம் பெற்ற பாரியவளர்ச்சிக்கு உரமிட்டது இவர்களின் தியாகங்களே. இராணுவ முற்றுகை ஒன்றின்போது காயமடைந்து பின்னர் வீரமரண மெய்திய விடுதலைப்புலி சத்தியநாதன் உடன் 1983 ஆடி 23 வரை நான்கு போராளிகள் தமிழீழ

[5ம் பக்கம் பார்க்க]

### ஜனாதிபதியின் யோசனைகளுக்கு அரச பாராளுமன்ற குழு அங்கீகாரம்

# இந்திய பிரதமர் ராஜீவ் பத்து தினங்களில் இலங்கை விஜயம்

## அமைச்சர் காமினி தகவல்

(கொழும்பு)

இனப்பிரச்னைக்கு அரசியல் தீர்வு காணும் நோக்கமாக ஜனாதிபதி ஜயவர்த்தனவால் முன்வைக்கப்பட்ட புதிய யோசனைகளை அரசாங்க பாராளுமன்றக்குழு நேற்று அங்கீகரித்துள்ளது. இதனைத் தொடர்ந்து இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி இன்னும் பத்துத் தினங்களில் இலங்கைக்கு விஜயமொன்றை மேற்கொள்வாரென அமைச்சர் காமினி திஸாநாயக்கா தெரிவித்துள்ளார்.

ஹோட்டல் கலதாரியில் நடைபெற்ற வைபவமொன்றில் இத்தகவலை வெளியிட்ட அமைச்சர் காமினி, ஜனாதிபதி ஜயவர்தனவின் யோசனைகளை அரசாங்க பாராளுமன்றக்குழு அங்கீகரித்தையடுத்து இனப்பிரச்னை தீர்வுக்கான அறிகுறிகள் தோன்றியுள்ளதாக தெரிவித்தார். மேலும் இலங்கைக்கு விஜயம் செய்யும் இந்தியப் பிரதமர் காந்தி ஜனாதிபதி ஜயவர்த்தனவைசந்த்து இன பிரச்னை தீர்வுக்கான இறுதி உடன்பாட்டை மேற்கொள்வாரெனத் தெரியவருகிறது.

அரசாங்கப் பாராளுமன்றக் குழு புதியயோசனைகளுக்கு அங்கீகாரம் வழங்கியதையடு

(8 ம் பக்கம் பார்க்க)

## சுமுகநிலை ஏற்படும்வரை வேலைக்கு திரும்புவதில்லை

### சீமெந்துஆலை ஊழியர் தீர்மானம்

(மாவிட்டபுரம் நிருபர்)

காங்கேசன்துறை சீமெந்து ஆலை தொழிலாளர்கள் யாவரையும்நேற்று வியாழக்கிழமை வேலைச்குத்திரும்புமாறு அறிவித்தல் விடுக்கப்பட்டபோதிலும் தொழிலாளர்கள் எவரும் வேலைக்குச்செல்லவில்லை. தமது உயிருக்கு பாதுகாப்பான சூழ்நிலை ஏற்படும்வரை வேலைக்குச் செல்வதில்லையென அவர்கள் அறிவித்துள்ளனர்.

காங்கேசன்துறையில் உள்ள

5-ம் பக்கம் பார்க்க)

## பூரி, குப்தா புலிகளுடன் நேற்று பேச்சுவார்த்தை

யாழ்ப்பாணம், வெள்ளி

நேற்றுக்காலை 9 30 மணியளவில் திடீரென யாழ்ப்பாணம் வந்த இந்திய உயர் ஸ்தானிகராலய தலைமைச் செயலர் எஸ். எச். பூரியும் தூதக பாதுகாப்பு அதிகாரி காப்டன் குப்தாவும் விடுதலைப்புலிகள் இயக்க முக்கியஸ்தர்களைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார்கள்

சுமார் இருமணிநேரம் இடம்பெற்ற இப்பேச்சுவார்த்தையின் பின் திரு. பூரியும், திரு. குப்தாவும் உடனடியாக கொழும்பு திரும்பினார்கள்.

[8ம் பக்கம் பாாக்க]

### வடமராட்சியில்

## பாதிக்கப்பட்ட மக்களுக்கு இந்திய நிவாரணம்

யாழ்ப்பாணம், வெள்ளி

வடமராட்சி இராணுவ நடவடிக்கைகளின்போது அப்பகுதியிலுள்ள கோவில்களில் தஞ்சமடைந்து, பின் தமது இருப்பிடங்களுக்கு திரும்பியுள்ள மக்களுக்கு இந்திய நிவாரணப் பொருள்கள் நேற்றுமுன்தினம் புதன்கிழமை அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக யாழ் அரசாங்க அதிபர் திரு. பஞ்சலிங்கம் தெரிவித்தார்.

(8ம் பக்கம் பார்க்க)

### அலஸ் தனது முதலாவது விசாரணையை

## நேற்று ஆரம்பித்தார்

[அலுவலக நிருபர்]

யாழ் போதனா வைத்தியசாலை மீது கடந்த மார்ச் 30-ம் திகதி கோட்டை இராணுவ முகாமிலிருந்து நடத்தப்பட்ட ஷெல் தாக்குதல் தொடர்பான விசாரணையை மேற்கொள்வதற்கென ஜனாதிபதி ஜெயவர்த்தனவால் நியமிக்கப்பட்ட முன்னாள் நீதியரசர் அலஸ் நேற்று நண்பகல் பதினொரு மணியளவில் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார்

நேற்றுக்காலை 7. 30 மணியளவல் பலாலி விமான நிலையத்தில் விமானம் மூலம் வந்திறங்கிய முன்னாள் நீதியரசர் அலஸ் ஹெலிகொப்டர் மூலம் யாழ். கோட்டை முகாம் வந்து ஹெலிகொப்டரிலிருந்து யாழ். போதனா வைத்தியசாலை மற்றும் நகரின் முக்கியமான பகுதிகளைப் பார்வையிட்டார்.

பின்னர் ஹெலிகொப்டர் மூலம் காங்கேசன்துறை சென்று அங்கிருந்து யாழ். அரசாங்க அதிபர் வை. மு. பஞ்சலிங்கத்துடன் காரில் யாழ். நகர் வந்தார்.

யாழ். வந்த அலஸ் ஞானம்ஸ் ஹோட்டலில் செஞ்சிலுவை சங்க பிரதிநிதிகளையும், பிரஜைகள் குழு உறுப்பினர்களையும் சந்தித்து விட்டு யாழ். போதனா வைத்தியசாலைக்கு விஜயம் செய்தார்.

யாழ். அரசாங்க அதிபர் வை. மு. பஞ்சலிங்கம், உதவி அரசாங்க அதிபர் பாலசிங்கம் உட்பட அலஸுடன் அவரது உதவியாளரும் யாழ் போதனா வைத்தியசாலை மீது கோட்டை முகாமிலிருந்து நடத்தப்பட்ட ஷெல் தாக்குதலினால் சேதமடைந்த கட்டிடங்களையும், வார்ட்டுக்களையும் பார்வையிட்டனர்

(5ம் பக்கம் பார்க்க)

## கமிஷன் முன் சாட்சியம்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் செயலகத்தில் நேற்று 2-00 மணியளவில் ஆரம்பமான அலஸ் கமிஷன் முன் யாழ் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் சு வித்தியானந்தன், யாழ். மருத்துவ பீட விரிவுரையாளர் டாச்டர் எஸ் சிவராஜா, யாழ் போதனா வைத்தியசாலை டாக்டர்களான கணேசரட்ணம், செல்வி குருசாமி, செல்வி ரட்ணம், செல்வி நாகராசா, செல்வி சிவபாதசுந்தரம், ஆஸ்பத்திரி ஊழியர்களான வி. சின்னத்தம்பி, கே. சிவஞானம், மார்ச் 30-ந் திகதி நடந்த ஷெல்தாக்குதலால் 19-ம்வார்ட்டிலிருந்து காயமடைந்த ஆனைக்கோட்டையைச் சேர்ந்தமார்க்கண்டு இரத்தினசிங்கம் ஆகியோர் சாட்சியமளித்தனர்,

இரவு ஏழுமணிவரை நேற்றைய அலஸ் விசாரணை இடம் பெற்றது.

இன்று காலை இரண்டாம் நாளாகநடைபெறவுள் அலஸ் கமிஷன் முன் கடந்த மார்ச் 30-ம் திகதி இடம்பெற்றஷெல் தாக்திதலினால் யாழ் போதனா வைத்தியசாலையில் இறந்தவர்

(5ம் பக்கம் பாாக்க)



முன்னாள் நீதியரசர் எஸ். வி அலஸ்

# வரி விளம்பரம

## விற்பனைக்கு

நல்லநிலையில் உள்ள Hyosta T . V 14'' B/W. சனி தவிர்ந்த ஏனைய நாட்களில் காலை 8-30 மணி முதல் மாலை 4 மணிவரை பார்வையிடலாம். அந்தோனிப்பிள்ளை சைக்கிள் கடை, (ஈழநாடு முன்பாக), மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். சி9982

ஹொண்டா C90 விற்பனைக் குண்டு. எந்நேரத்திலும் பார்வையிடலாம். நாதன், 40, வேம்படி வீதி, யாழ்ப்பாணம். சி-9960

புதிய Sony T V 2092 ME, யூஸ்வைக்கும் பெட்டி, பலவித கட்டில்கள், மேசைகள். தொட்டில்கள், Screen Electric Cooker, with oven, Type writer, Ceiling fan, Ice Cream beaters Play pen, Amplifer மற்றும் பல பொருள்கள் விற்பனைக் குண்டு பத்மநாதன், பிறிமல்டி சேவிஸ், திருநெல்வேலி வடக்கு. சி-9966

சிங்கர் Zig Zag, Usha Zig Zag தையல் மெசின்கள், கசற் றேடியோக்கள், Show case, பெல்ஜியம் கண்ணாடி மேசைகள், Office மேசைகள், ஹோல் செற், Meet Safe, அல்மாரி, கட்டில் மற்றும் பலவித வீட்டுப்பாவனைப் பொருள்கள் மிகவும் மலிவுவிலையில் உடன் விற்பனைக்குண்டு. M. தியாகராஜன், 326, பிரதானவீதி, யாழ்ப்பாணம். (சென்பற்றிக்ஸ் சந்தியருகில்). சி-9943

Broilers புரொய்லர் கோழிகள் Love birds விற்பனைக்குண்டு. அண்ணா பாம், இணுவில். அண்ணா பாம், யும்மா மொஸ்க் லேன், யாழ்ப்பாணம். ஏ-1948

சகலவிதமான பிறந்ததின, திருமண, மற்றும் வைபவங்களுக்குமான வாழ்த்து மடல்கள் புதிதாக வந்துள்ளன. வியாபாரிகளுக்கு கழிவு வழங்கப்படும். கடிதமூலம்தொடர்பு கொள்ளும் வியாபாரிகளுக்கு நேரடியாக விநியோகம் செய்யப்படும். பூபாலசிங்கம் புத்தகசாலை, 15/2, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். ஏ-1940

## 4-வது ஆண்டு நினைவஞ்சலி



ஆறுமுகம்
ஜோன் தேவராஜா
(இரசாயனி, சீமெந்துக் கூட்டுத்தாபனம்)

தோற்றம்: 15-9-1942
மறைவு: 24-7-1983

உங்கள் பசுமையான நினைவுகளில் உயிர் வாழ்கிறோம். நீங்கள் இன்ப மோட்சம் எய்திடவே இறையை இறைஞ்சுகிறோம்.

மனைவி, பிள்ளைகள்.
புலோலி மேற்கு,
பருத்தித்துறை.
(சி 9964)

## தேவை

நல்லநிலையில் சொந்தக்காரரிடமிருந்து வெஸ்பா ஸ்கூட்டர் (Vespa) அல்லது C90 நேரில் கொண்டு வரவும். தொடர்பு: 23, கச்சேரி நல்லூர் வீதி, சுண்டிக்குளி. (தபால் கந்தோருக்கு அருகாமையில்), யாழ்ப்பாணம். சி-9961

ஸ்ருடியோ வேலைகளில் அனுபவமுள்ளவர்கள் தேவை தங்குமிடவசதிகள் கொடுக்கப்படும். காலை 9 மணிக்கும் 12 மணிக்கும் இடையில் [ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த] நாட்களில் நேரில் வரவும். 'நமோஸ்கார்'', டச்சு வீதி, சாவகச்சேரி. சி-9977


கைத்தறி நெசவு பெண்மேற்பார்வையாளர் தேவை. பயிற்சி பெற்ற தகுதிச்சான்றிதழ் உள்ளோர் உடனடியாக நேரில்வரவும். பாவு தயாரித்தல் மற்றும் டிசைன் நெசவு தெரிந்திருத்தல் வேண்டும் யாழ் நகரத்தில் வசிப்பவர் விருப்பத்தக்கது. வசந்தபுரம் சில்க்ஸ், 75/11, பிறவுண் வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம். சி-9975

## அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு

கிளி/பூநகரி மகாவித்யாலய அபிவிருத்திச் சங்கத்தினால் 26-06-87ந் திகதி ஒழுங்குசெய்யப்பட்ட மேற்படி சீட்டிழுப்பு தவிர்க்கமுடியாத காரணமாக 25-09-87ம் திகதிக்குப் பின்போடப்பட்டுள்ளது என்பதனை அறியத் தருகின்றோம்.

தலைவர்
பா. அ. ச.,
கிளி/பூநகரி ம. வி.,
பூநகரி.
(ஏ 1947)

## 4-ம் ஆண்டு நினைவஞ்சலி



பொன்னையா
பரராஜசிங்கம்

தோற்றம்:
27-11-1941
மறைவு:
24-07-1983

சீருடன எம்மை வளர்த்து சிறப்புடன் வாழ்ந்த எமது அன்புத் தந்தையே! நீங்கள் எம்மை விட்டுப்பிரிந்து இன்றுடன் ஆண்டுகள் நான்காகிவிட்டாலும் நீங்கள் என்றென்றுமே எம் நெஞ்சில் நீங்காது நிறைந்திருப்பீர்கள்.

உங்கள் அன்புச் செல்வங்கள்:
மகன்: ப. மயூதரன்,
மகள்: ப. நிஷங்கா
(சி 9978

## தவறிவிட்டது

இல DL 043134 ச. சிவராசா, வேதரடைப்பு, காரைநகர் என்பவருடைய றைவிங் லைசென்ஸ் வவனியாவிற்கும் யாழ்ப்பாணத்திற்கு மிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்ட விலாசத்தில் அல்லது 24/4303 லொறியில் கொடுக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். [சி-9981]

## பிரார்த்தனை

இயேசுவின் திரு இருதயம் உலகம் முழுவதும் என்றென்றும் வணங்கவும், போற்றவும், நேசிக்கவும், மகிமைப்படுத்தவும் படுவதாக.

இயேசுவின் திரு இருதயமே! எங்கள் பேரில் இரக்கமாயிரும்.

கைவிடப்பட்டவர்களின் உபகாரியான புனித யூதாததேயுவே! எங்களுக்காக வேண்டிக் கொள்ளும்.

இச்செபத்தை தினமும் ஒன்பதுமுறை செபித்து வந்தால் நீங்கள்கேட்கும் விண்ணப்பங்கள் அருளப்படும்.

மன்றாட்டுக்கள் கேட்கப்பட்டமைக்காக இயேசுவின் திருஇருதயத்துக்கும், புனித யூதாததேயுக்கும் நன்றி.

Publication must be promised
Joseph.
(சி-9972)

## 4-ம் வருட நினைவஞ்சலி



மகாதேவா
இராஜகாந்தன்
(பவுண்)
(1983 இருண்ட ஆடிக் கலவரத்தின் போது மானிப்பாயில் அகால மரணமடைந்த சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் பழைய மாணவன், மானிப்பாய் இந்துக்கல்லூரி மாணவன்.)

மலர்வு:
26-03-1964
உதிர்வு:
24-07-1983

ஆண்டுகள் நான்கு போனாலும் ஆரமுதே உன் நினைவு வாட்டுகிறதே, உன்னை பிரிந்த பாவியானோம், உன் நினைவால் உள்ளம் தவிக்கிறதே, ஆடி புயலில் அரக்கர் உனை அழித்தனரே. ஆறுதல் அடைய முடியவில்லையே. ஆண்டுகள் ஆயிரம் சென்றாலும் எமது நெஞ்சங்களில் நீ வாழ்ந்திருப்பாய். உனது ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திக்கும்:

அம்மா, தங்கை, கண்ணா.
சண்டிலிப்பாய் வடக்கு
சண்லிப்பாய்.
(சி 9848)

# PERSONAL CLASSES
## for 88 & 89

| | | |
|---|---|---|
| CHEMISTRY | — | SENTHIL MOHAN |
| PHYSICS | — | VICKY |
| BOTANY | — | GUNASEELAN |
| ZOOLOGY | — | ELANGO |

91/8, HINDU LADIES LANE,
KANTHARMADAM,
JAFFNA.

Special Classes will be held
for the Vadamaradchi Students.

[சி-9970]

## உருக்கமான வேண்டுகோள்

மன்னாரில் 14-07-87 அன்று இனந்தெரியாதவர்களினால் கடத்திச் செல்லப்பட்ட எமது குடும்பத் தலைவர் ஜனாப் எம். ஏ. கபூர் (இணைப்பதிகாரி வடபிராந்திய போக்குவரத்துச் சபை மன்னார்-வவனியா) காணாமல் போயுள்ளமையினால் செய்வதறியாது நாம் பெரும் துன்பமடைகின்றோம்.

எனவே இச்சம்பவத்தில் தொடர்புடையவர்கள் கருணைகூர்ந்து மனிதாபிமான ரீதியில் இவரை எம்மிடம் ஒப்படைத்து மீண்டும் எமது இல்லத்திற்கு விளக்கேற்றி வைக்குமாறு பணிவுடன் வேண்டுகிறோம்.

நன்றி.
மனைவி, மக்கள், மருமக்கள்.
[சி-9969]

## அறிவித்தல்

கீழ்காணும் இரண்டு பெற்றோல் விற்பனை நிலையங்களிலும் மறு அறிவித்தல்வரைக்கான விலை விபரங்களை வாடிக்கையாளர்களின் கவனத்துக்கு அறியத்தருகிறோம்.

| | | |
|---|---|---|
| லங்கா சுப்பர் (பெற்றோல்) | ஒரு லீற்றர் | 16/50 |
| டீசல் | ஒரு லீற்றர் | 10/- |
| மண்ணெண்ணை | ஒரு லீற்றர் | 8/50 |
| L. P. Gas (சமையல்-13 Kg) | | 200/- |

| | |
|---|---|
| S. SARAVANAPAVAN, | LAXSIVA SALES |
| LANKA FILLING STATION, | PURCHASES LTD., |
| 113, Main Street, | 122, Kasthriar Road, |
| JAFFNA. | JAFFNA. |

[சி-9976]

வழமையான
## நேரடி பஸ்சேவை

வவனியா ↓
↓ ↑ யாழ்ப்பாணம்
வவனியா ↑

தினசரி நடைபெறுகிறது உங்கள் பயணம் சுலபமாக எம்மிடம் பதிவு செய்யுங்கள்.

## பிள்ளையார் ஸ்ரோர்ஸ்

131, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்
[ஏ 1941]

வாடிக்கையாளர்கள் நன்மைகருதி
இல்லங்களுக்கு
நேரடி விநியோகம்

# எல். பி. காஸ்
# L. P. GAS

குறைந்த விலையில் பெறுவதற்கு

## பிள்ளையார் ஸ்ரோர்ஸ்

131. மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
[ஏ 1942]

அமெரிக்கக் கொடியுடன்

# 'ஹோமோர்ஸ்' நீரிணையை குவைத்

# எண்ணெய்தாங்கிக் கப்பல் கடந்தது!

## அமெரிக்க போர்க்கப்பல்கள் பாதுகாப்பளித்தன!!

லண்டன், ஜூலை. 23

**அமெரிக்க கொடியைத் தாங்கிய குவைத் எண்ணெய்த் தாங்கிக்கப்பல்கள் ஈரானின் தீவிர அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் ஹோர்மோர்ஸ் நீரிணையை அமெரிக்க கடற்படைப்பாதுகாப்புடன் கடந்து சென்றன. ஈரானின் நீர்ப்பிரதேசத்துக்கு ஊடாகவும், அதன் ஏவுகணைகளின் தாக்குதல் வல்லமைக்கு உட்பட்ட பிரதேசம் ஊடாகவும் இந்த எண்ணெய் தாங்கிக் கப்பல்கள் 'ஹோர்மோஸ்' நீரிணையில் பயணத்தை மேற்கொண்டிருந்தது.**

நான்கு அமெரிக்க போர்க் கப்பல்களின் பாதுகாப்பு வியூக அமைப்புடன், அந்த குவைத் எண்ணெய்த் தாங்கிக்கப்பல்கள் அமெரிக்கொடியைத்தாங்கியபடி 'ஹோமோர்ஸ்' நீரிணையைக் கடந்தன

இந்த நீரிணையைக் கடந்த சமயம் ஈரானிய கடற்படைப் பிரிவுகள் பூரண உஷார்நிலையிலிருந்தன 'சில்க்வோம்' என்ற சீனத்தயாரிப்பு ஏவுகணைகள் பொருத்தப்பட்ட ஈரானிய தளங்களையும் அக்கப்பல் அணி கடந்து சென்றது

ஆனல் ஈரான் அது அறிவித்தது போல எதுவித தாக்குதலையும் மேற்கொள்ளவில்லை தாக்குதல்கள் எதுவும் நடத்தப்பட்டிருக்கும் பட்சத்தில் குவைத் எண்ணைத் தாங்கிக்கப்பல்களை தாக்குதல் பாதிக்காதவிதத்திலேயே அமெரிக்க கடற்படைக் கப்பல் வியூகம் அதைச்சுற்றி அமைக்கப்பட்டிருந்தது.

ஈரானின் தாக்குதல் எவற்றுக்கும் உடன்பதிலடி கொடுக்கும்படிஅமெரிக்ககப்பல்களுக்கு உத்தரவிடப்பட்டிருந்தது.

'ஹோமோர்ஸ்' நீரிணையை இக்கப்பல் அணி கடந்துள்ள போதிலும் ஈரானின் கடற்படை அச்சுறுத்தல்பிராந்தியம் ஊடாக அவை தொடர்ந்து சென்று கொண்டிருக்கின்றன.

குவைத்தை இக்கப்பல்கள் சென்றடைய இன்னும் இரு தினங்களாகுமென்று அறிவிக்சப்பட்டது.

ஈரானிய கடற்படைக்கப்பல்கள், பீரங்கி விசைப்படகுகள், போர்விமானங்கள் என்பன உஷார்நிலையில் தொடர்ந்து இருந்துவருகின்றன.

# ஆப்கானில் கண்ணிவெடி

# 22 பஸ் பயணிகள் பலி!

காபுல், ஜூலை 23

ஆப்கானிஸ்தானில் சோவியத் அருகயுள்ள டக்கார் என்ற இடத்தில் 22 பஸ்பயணிகள் கண்ணிவெடித்தாக்குதலில் சிக்கி உயிரிழந்தனர்.

இச்சம்பவப நேற்று இடம்பெற்லது ஆப்கானிஸ்தானில் கிளர்ச்சிக்குழுக்களுடன் போர் நிறுத்தம்செய்து இருவார காலத்தில் இச்சம்பவம் இடம்பெற்றது.

இக்கண்ணிவெடித் தாக்குதலில் கொல்லப்பட்ட 22 பேரும் அப்பாவிப் பொதுமக்களாவர் என்று தெரிவிக்கப்பட்டது.

ஆப்கானிஸ்தான் அரசாங்கம் இச்சம்பவம்குறித்து ஆழ்ந்தகவலையையும், கண்டனத்தையும் வெளியிட்டுள்ளது.

அத்துடன் கிளர்ச்சியாளர்களுடனுன பகைமை இதன் மூலம் தொடர்ந்து நீடிக்கும் எனவும் தெரிவித்துள்ளது.

## எம்.ஜி.ஆர்—கிட்டு சந்திப்பு!

(சென்னை)

தமிழக முதலமைச்சர் திரு. எம் ஜி. இராமச்சந்திரனை தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கமும், தளபதி கிட்டுவும் நேற்றுமுன் தினம்சந்தித்து சுமார் ஒருமணிநேரம பேச்சுக்கள் நடத்தியுள்ளனர்.

எனினும் பேச்சுகள் பற்றிய விபரங்களஎதுவும் வெளியிடப்படவில்லையென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

## "பெற்றசுதந்திரத்தை பாதுகாப்பதே இனிமேல் செய்யவேண்டியமுதல்பணி!'

### ஜனதிபதி வெங்கட்ராமன்

புதுடில்லி, ஜூலை, 23

"40 வருடங்களுக்குமுன்னர் அருமபாடுபட்டுப்பெற்ற சுதந்திரத்தை நாம் பாதுகாக்க வேண்டியதே இனிமேல்செய்ய வேண்டிய தலையாயபணியாகும்'' என்று இந்தியாவின் புதிய ஜனதிபதி திரு ஆர். வெங்கட்ராமன் தெரிவித்துள்ளார்.

ஜவஹர்லால்நேரு நூற்றுண்டு விழாக்கமிட்டி,மற்றும் இந்தியாவின் 40-வது சுதந்திர தின கொண்டாட்ட ஏற்பாட்டாளர்கள் மத்தியில் நேற்று உரைநிகழ்த்தியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

திரு. வெங்கட்ராமன் தொடர்ந்து பேசியதாவது: "40 வருடங்களுக்கு முன்னர் நாம் அரும்பாடுபட்டு இந்நாட்டின் சுதந்திரத்தைப் பெற்ருேம். ஆனல் இன்று சீர்குலைவுச் சக்திகளாலும், பிளவுசக்திகளாலும் நாம் பெற்ற சுதந்திரம் அச்சுறுத்தலுக்குள்ளாகியுள்ளது.

"இச்சுதந்திரத்தை தீயசக்திகளிலிருந்தும் காப்பாற்றி அதன் மேன்மையை பேணிக் காப்பதே எம்முன்னுள்ள தலையாய கடமையாகும்''என்ருர்.

ஈக்வடோரில் கத்தோலிக்க

# ஆயரும், கன்னியாஸ்திரியும் ஆதிவாசிகளால் படுகொலை

லண்டன், ஜூலை 23

ஈக்வடோர் நாட்டைச் சேர்ந்த கத்தோலிக்க ஆயர் ஒருவரும், கன்னியாஸ்திரி ஒருவரும் ஆதிவாசிகள் கும்பலொன்றினுல் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் ஈக்வடோரின் காட்டுப்பகுதி ஒன்றுக்குள் நிகழ்ந்துள்ளது.

அலஹந்ரா என்ற அந்த கத்தோலிக்க ஆயர், கன்னியாஸ்திரி ஒருவருடன் தமது மத நடவடிக்கைகளின் நிமித்தம் அக்காட்டுப்பகுதியின் ஆதிவாசிகளை சந்திக்கச் சென்றுள்ளார்.

அப்போதே அமெரிக்க இந்தியர்களான அந்த ஆதிவாசிகள் அவர்கள் இருவரையும் ஈட்டிகளாலும் கத்தி, கோடரியாலும் மூர்க்கத்தனமாக வெட்டிக் கொலை செய்திருந்தனர்

இவர்கள் கொலைசெய்யப்பட்டுள்ள இத்தகவலை அவர்களை அக்காட்டுப்பகுதியிலிருந்து அழைத்துவரச்சென்ற ஹெலிகொப்டர் விமானி ஒருவர் தெரிவித்தார்.

### ஆடிஅமாவாசைத்திருவிழா

யாழ்ப்பாணம், வெள்ளி

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி ஆலயத்தில் நாளை சனிக்கிழமை காலை ஆடிஅமாவாசைத் தீர்த்தம் நடைபெறும்.

துர்க்கா புஷ்கரணி தீர்த்தத்தில் மாவை முருகப்பெருமானின் சக்திவேல் எழுந்தருளித் தீர்த்தமாடும் வைபவம் காலை 7 மணிக்கு நிகழும்.

கீரிமலையில் வழமைபோல பிதிர்க்கடன் செய்வதற்கான ஒழுங்குகளும் செய்யப்பட்டிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ப)

தெற்காசிய நாடுகளின் அமைதி இயக்கம்

## அணு ஆயுத எதிர்ப்பை தீவிரப்படுத்த முடிவு

(புதுடில்லி)

அணுஆயுதங்கள் அனைத்தையும் அகற்றிவிடவும், அணு ஆயுத பரிசோதனைகளுக்கு முற்றுப்புள்ளிவைக்கவும் அமெரிக்காவின்விண்வெளிப்போர்த் திட்டத்தைத் தடுப்பதுமான தங்கள் முயற்சிகளை தீவிரப் படுத்துவதென தெற்காசிய நாடுகளின் அமைதி இயக்கங்கள் முடிவெடுத்துள்ளன

இந்தியா, இலங்கை, பாகிஸ்தான், நேபாளம், பங்களாதேஷ் ஆகியநாடுகளின்அமைதி இயக்கங்களின் பிரதிநிதிகள் குழுக்கூட்டத்தில் மேற்கண்டவாறு முடிவெடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான அறிக்கைகளை சம்பந்தப்பட்ட நாடுகளுக்கு அனுப்புவதெனவும் இத்தீர்மானங்களுக்கு உலக நாடுகளின் ஆதரவைத்தேடுவதுமே தமது அடுத்த நடவடிக்கையாகுமென்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (சி)

## 3,36,545 தமிழர்கள் அகதி முகாம்களில் தஞ்சம்

யாழ்ப்பாணம், வெள்ளி

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளினுல் 336 545 தமிழர்கள் அகதிமுகாம்களில் வதிவதாக அகதிகள் புனர்வாழ்வுக்கழகம் தெரிவித்துள்ளது.

இந்த அகதிகளில் யாழ்ப்பாணத்தில் மட்டும் 36,560 குடும்பங்களைச் சேர்ந்த 182,800 மக்கள் அகதிகளாகவுள்ளனர். இவர்களில் பெரும்பாலானவர்கள் வடமராட்சியிலிருந்து இடம் பெயர்ந்தவர்களாவர்.

இந்தஅகதிகளுக்காக நூற்றி எழுபத்தேழு அகதி முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளதாகவும் புனர்வாழ்வுக் கழகம் தெரிவித்தது. (ஓ)

அகதிகளுக்கு

## நிவாரணம் வழங்குமாறு அரச அதிபர் பணிப்பு

[வவனியா நிருபர்]

வடமராட்சியிலிருந்து அண்மைக்கால அசம்பாவிதத்தினுல் பாதிக்கப்பட்டு வவனியா மாவட்டத்திற்கு வந்துள்ள அனைத்து குடும்பங்களுக்கும் ஒருமாத காலத்திற்கு உணவுப் பொருள்களை நிவாரணமாக வழங்கும்படி வவனியா அரசாங்க அதிபர் திரு. கே. ஸி. லோகேஸ்வரன் சம்பந்தப்பட்ட சகல உதவி அரசாங்க அதிபர்களுக்கும் பணித்துள்ளார் என்று கச்சேரி வட்டாரங்கள் தெரிவித்தன.

வடமராட்சி இராணுவ நடவடிக்கையினுல் பாதிக்கப்பட்டு அநேகமான குடும்பங்கள் வவனியா மாவட்டத்திற்கு குடிபெயர்ந்து அகதிகளாக வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வீடுகள் தகர்ப்பு குடிசைகள் தீக்கிரை

(கொழும்புத்துறை நிருபர்)

வடமராட்சியில் உடுப்பிட்டி வல்வெட்டித்துறை வீதியில் உள்ள நாவலடிக் கிராமத்தில் ஓலை வீடுகள் இராணுவத்தினரால் தீயிட்டுக் கொளுத்தப்பட்டு வருகின்றன. கல் வீடுகள் இடித்துத் தகர்க்கப்படுகின்றன. கல்வீடுகளைத் தகர்ப்பதற்காக இராணுவத்தினரால் இரு புல்டோசர்கள் கொண்டுவரப்பட்டுள்ளன.

நாவலடியில் வீடுகள் தகர்க்கப்பட்டு அழிக்கப்படுவதை தடுக்குமாறு கோரும் மகஜர் ஒன்றை இச்கிராமப் பிரமுகர்கள் யாழ். மாவட்டஅரசாங்க அதிபரிடம் நேரில் கையளித்து வீடுகள் உடைக்கப்படுவது பற்றி முறையிட்டனர்.

## வ. பி. போக்குவரத்துச் சபை ஊழியர் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், வெள்ளி

மன்னரில் இனம் தெரியாதவர்களால் கடத்திச் செல்லப்பட்ட வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் மன்னர்-வவனியா இணைப்பதிகாரி ஜனப் எம் ஏ. கபூரை உடன் விடுதலை செய்யுமாறு மன்னர் சாலை ஊழியர்கள் சம்பந்தப்பட்டவர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

துரதிர்ஷ்ட வசமாக ஜனப் கபூர் கடத்திச் செல்லப்பட்டமையினுல் பாதிக்கப்பட்ட அவரது சேவையை மக்கள் மீண்டும்பெற சம்பந்தப்பட்டோர் ஆவனசெய்யவேண்டும் என்றும் அந்தவேண்டுகோளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### மனைவி மக்களும் கோரிக்கை

ஜனப் கபூரின் மனைவி மக்களும இதுபோன்ற ஒருகோரிக்கையை விடுத்துள்ளனர்.

### மணிவாக்கு

காட்சிக் கெளியான் காண்
கண்டாலுங் காணுன் காண்
மாட்சி மனம் வைத்தார்க்கு
மாணிக்கத்துள்ளொளிகாண்.

— பட்டினத்தார்.

# நமது நோக்கு

## டாக்டர்கள் பிரச்னை பனிப்பாறையின் நுனி

நாடிபிடித்துப் பார்ப்பதை ஒரேநாளில் ஒருவன் கற்றுக்கொள்ள முடியுமா? வைத்தியரோடு சேர்ந்து, பலநாள் சுற்றி அலைய வேண்டும். பிறகுதான் சுப நாடி, பித்தநாடி என்று தெரிந்துகொள்ளமுடியும்.

நாடிபார்ப்பதையே யார் தொழிலாகக் கொண்டிருக்கிறார்களோ அப்படிப்பட்டவர்களோடு சேர்ந்து பழக வேண்டும்.

மருத்துவப் படிப்பும் பயிற்சியும் எவ்வாறுஅமைய வேண்டுமென்பதில் சர்வதேச அங்கீகாரம்பெற்ற மருத்துவ சங்கங்களே தீர்ப்பளிக்கவேண்டும்.

எங்கள் நாட்டில் அரச வைத்தியர் சங்கம் எழுப்பியிருக்கும் சர்ச்சை அந்த அடிப்படையில் அணுகப்படவேண்டும். ஜீ எம் ஓ ஏ ஒருசாதாரண தொழிற்சங்கம் அல்ல;இன்று நடைபெறும் வேலைநிறுத்தம் சம்பளத்தையோ அல்லது அதன் அங்கத்தவரையோ பொறுத்த பிரச்னை அல்ல.

மருத்துவப்படிப்பும் பயிற்சியும் ஒரு அங்கீகரிக்கப்பட்டகொள்கைக்கு அமைய வேண்டும்; பின்கதவால் இவ்வித உயர்தரமான பயிற்சிக்கு உள்ளிடுவது வைத்தியர்களின் தராதரத்தை இறக்கிவிடுமென்பது உடனடிவிளைவு. காலகதியில் அரைவைத்தியர் முக்கால் வைத்தியரென்ற வகை ஆஸ்பத்திரிகளில் நிரம்பிவழியும் நோயாளிகளைத்தாக்கும்.

பொதுமக்கள் இந்த வாதத்தை நுணுக்கமாக இனங்காணும் ஆற்றலோ அக்கறையோ அற்றவர்கள். டாக்டர்கள் தொகை அதிகரிக்கவேண்டும் படிப்பை முடித்தவர்கள் ஏன் பரீட்சை எழுதமுடியாது? பணமுடையவர்படிக்க தனியார் கல்லூரி இருக்குமானால் அவர்கள் படித்ன வெளியேறுவதில் என்ன தவறு?

இவைபோன்ற ஆழம் நீளமற்ற வினக்கள் இன்று நடைபெறும் வேலைநிறுத்தம் ஒரு அடாத செயல் என்ற முடிவுக்கு உதவும்.

நோயாளிகள் டாக்டர்களின் கொடுமையால் (பயங்கரவாதத்தால்) மடிகிறார்கள் என்று ஓலமிடுகிறது 'தவித்த முயல் அடிக்கும்' அரசு.

'நாய்க்கேன் போர்த் தேங்காய்' என்று நாம் இதனைக் கைவிடத் தயாரில்லை. எங்கள் மக்கள்படும் துயர் முதலாவதென்றாலும், இது பொதுமக்களைக் காலகதியில் பாதிக்கும்பிரச்னை என்பது தெளிவுபடவில்லை.

அரசின் கடமைகள் எவை தொல்லைகொடுக்கின்றனவோ அவற்றைத் தனியார் பொறுப்பில் பொறித்துவிடுவதே இன்றைய ஆட்சியின் மந்திரமும், தந்திரமும்; மருந்துமெனலாம்.

இலவசக்கல்வியின் ஆன்மிக அடிப்படை இன்றைய அரசுக்கு எட்டாதகொப்பு. அதனை எவ்வாறு ஆற்றிவிடலாமென்ற திட்டம் ஒரு பனிப்பாறை போல் படர்ந்து வருகிறது.

தனியார் மருத்துவக் கல்லூரி அப்பாறையின் நுனியில் தட்டுண்டு தளம்புகின்றது. டாக்டர்கள் சமூகம் இதில் வெற்றிகண்டால் பல்கலைக் கழகங்களிலும் சிரேட்டபாடசாலைகளிலும் அரசு கைவைக்கத் தயங்கும். இவ்வித ஆட்சி இருக்கும் வரைக்கும் இலவசக் கல்வி ஒழிக்கும் திட்டம் பனிப்பாறைபோலவளரும். கடலில் மறைந்திருப்பதால் ஜீ எம் ஓ ஏ போன்று கப்பல்கள் மிகஜாக்கிரதையாக இருத்தல் வருங்கால பிரயாணத்துக்கு உதவியாகவிருக்கும்.

## நாளை நடைபெறும் 'சமாதான'ப் பரீட்சை

யாழ் குடாநாடு தீவுக்குள் ஒரு தீவாகிவிட்டது. ஆனால் 'எந்த மனிதனும் ஒரு தீவல்ல' என்று ஆங்கிலப் புலவர் 'டன்' (Donne) சொன்னதுபோல இதயத்தின் ஒலி இமயத்தையும் கடக்கவல்லது. எனவே யாழ்ப்பாணத்தில் விசேட பொலிஸ் வானெலி நிறுவுதல்பற்றி பரவாய்பண்ணத் தேவையில்லை.

யாழ். குடாநாட்டில் சுமார் ஒன்பதிணுயிரம் மாணவர்தோன்றும் ஏ.எல். பரீட்சை நாளை ஆரம்பமாகிறது. சமார் ஒரு மாதம் நடைபெறும் இப்பரீட்சை எவ்வித விக்கினமுமின்றி நடைபெற வேண்டுமென விநாயகப்பெருமானை வேண்டுகின்றேம்.

யாழ் குடாநாட்டில்மட்டுமல்ல, தமிழ்மக்கள் வாழும் வடக்கு கிழக்கு மாகாணங்களிலும் இந்தப் பிரார்த்தனை இன்றியமையாதது.

முதலாவது இறைவன்; இரண்டாவது இதற்கு உறுதுணையாகவிருக்கவேண்டியவர்கள் தமிழ்ப்போராளிகள். அவர்களின் கட்டுப்பாட்டில் உள்ள யாழ்.குடாநாடு மட்டுமல்ல, தமிழ்ப் பரீட்சார்த்திகளின் பரீட்சை நிலையங்கள்அனைத்திலும் அமைதி நிலவுவது அவர்களின் பெரும் பொறுப்பு

யாழ் குடாவில் ஒரு வளைகுடா யுத்தத்தை வருவிக்க விரும்பினுர் பாதுகாப்பு அமைச்சர். யாழ். குடா எத்தனை வீதம் அரசின் கட்டுப்பாட்டிலென்பது இன்று ஆராய்ச்சிக்குரிய விடயம் அல்ல; இப்பரீட்சையைப் பகிஷ்கரிக்க போராளிகள் எடுத்த திட்டம் பெற்றோரால் முறியடிக்கப்பட்டதென்ற பாதுகாப்பு அமைச்சரின் பொறுப்பற்ற பிரசாரம் அமைதியீனத்துக்கு தூபமிடும் செயல்.

இதனைப் பொருட்படுத்தாது எங்கும் எந்நேரத்திலும் எதுவித அசம்பாவிதம் நடவாது, முளைக்குமுன் கிள்ளிவிடும் ஆற்றல் சம்பந்தப்பட்ட எல்லோருக்கும் இருக்கவேண்டும்.

போனது போகட்டும்; பல இன்னல்கள் மத்தியில் இப்பரீட்சைக்குத் தோன்றும் எங்கள் வருங்காலச் செல்வங்களைப் பாதுகாப்பது எம் இளைஞரின் பொறுப்பு. அதற்குஎவ்வித இடரும்நேரிடாமல் விசேட விழிப்புடன் நடப்பது அரசின் கடமை.

கண்ணைக் கெடுத்தவன் கோலைக்கொடுப்பானுகையால், எழுதுகோல் வளம் பெற இந்த 'அகதிகளுக்கு' எல்லோரும் உதவுங்கள்!

உலக அரசியல் அவதானி

# "எங்கள் நண்பர்களிடமிருந்து எங்களைப் பாதுகாருங்கள்"

## இதுவே இன்றைய அமெரிக்க அரசியலுக்குப் பொருத்தமன கோஷம்

### வாஷிங்டன்

'ஆருயிர் நண்பர்கள் இஸ்ரேல், ஈரான், பிலிப்பைன்ஸ், தென்கொரியா, ஆகியன அமெரிக்காவுக்கு அள்ளி வைத்தன. இன்று பாகிஸ்தான் அவற்றின் அடுச்சுவட்டைப் பின்பற்றுகின்றது

பாகிஸ்தானிடம் அணுகுண்டு உண்டா இல்லையா, அதனைத் தயாரிக்க முடியுமா? முடியாதா? என்ற நீண்ட வாதம் இந்தியாவால் எழுப்பப்பட்டது இதற்குஅமெரிக்கா எவ்வகையிலும் உதவலாகாது. பாகிஸ்தானுக்கு உதவும் ஆயுதங்கள் இந்தியாவுக்கெதிராக உபயோகிக்கப்படுமென்றும், அணுகுண்டு தயாரிக்க முடிந்தால் இந்து சமுத்திர பிரதேச நாடுகள் பிரளயத்தை எதிர்நோக்குமென்றும், இந்தியா மட்டுமல்ல, பல அமெரிக்க அரசியல் விற்பன்னர்கள் தெட்டத் தெளிவாக எடுத்துரைத்திருக்கின்றனர்.

இந்த நீளமான பின்னணியில் இன்று நடைபெறும் நாடகம் பாகிஸ்தான் நடத்தி வரும் கபட நாடகத்தை தெரியாது என்று சொல்லும் றீகனின் நாடகம்.

அணுகுண்டுகளை உற்பத்தி செய்வதற்குத் தேவையான பொருள்களை சட்டவிரோதமாக தனது நாட்டுக்கு அனுப்ப பாகிஸ்தானியர் ஒருவர் ஏன் முயற்சி கொண்டாரென்று அமெரிக்கா பாகிஸ்தானை விளக்கம் கேட்டிருக்கின்றது.

இப்பொருள்ளைக் கடத்த முயன்றவர் கனடாவைப்பிறப்பிடமாகக் கொண்ட பாகிஸ்தானி-அர்ஷாட்பெருஸ்.இவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.இப்பொருள்களை பாகிஸ்தானுக்கு ஏற்றுமதி செய்ய அமெரிக்க ஏஜென்ட் ஒருவருக்கு லஞ்சம்கொடுக்க முயன்றதாகவும் குற்றம் சாட்டப்பட்டிருக்கிறார்

நண்பன் செய்த குற்றமென்றால் கோபம் அதிகரிக்கும் 'எற் ரூ' என்று சீசர் சொன்னது போல நீயுமா இந்த விளையாட்டில்? என்று பாகிஸ்தானை அமெரிக்கா கேட்டால் அதுவும் நாடகமே

பாகிஸ்தான் அணுகுண்டை உற்பத்தி செய்து நிரூபிக்கப்பட்டால் 1984ம் சட்டத்தின் கீழ் அதற்கு அளித்து வரும் பெரும் உதவி வெட்டப்படும் அப்படி நடக்குமா?

வாஷிங்டனுக்கு சங்கடமான நிலை. ஆப்கான் கிளர்ச்சிக்காரருக்கு கோடிக்கணக்கான டொலர் பெறுமதியான ஆயுதங்களை அமெரிக்கா வழங்குவது பாகிஸ்தான் மூலமே. அமெரிக்க உதவி நிறுத்தப்பட்டால் பாகிஸ்தான் ஆயுத விநியோகத்தை நிறுத்தக் கூடும்.

றீகனுடன் தாட்சருக்குண்டான விசேட தொடர்பு வாஷிங்டன் விஜயத்தில் வற்புறுத்தப்பட்டது. அமெரிக்க நட்பை றீகன் மூலம் பலப்படுத்த முயலும் பிரிட்டிஷ் பிரதமர் தமது வாஷிங்டன் ஒருநாள் விஜயத்தில், 'ஈரான் ஊழலில் வலுவிழந்திருக்கும் ஜனுதிபதிக்கு உற்சாகமளித்திருக்கிறுர். அதெல்லாவற்றையும் மறந்து ரஷ்யா முன்வைக்கும் நடுத்தர. குறுகிய தூர ஏவுகணைகளை ஐரோப்பாவிலிருந்து அகற்றும் திட்டத்துக்கு ஒத்துழைப்புநல்கி, சர்வதேச தலைமைத்துவம் வகிக்க அமெரிக்கா முன்வரவேண்டுமென்று கேட்டிருக்கிறுர்.

பாதுகாப்பு விடயத்தில் வெற்றியென்றால் தாட்சர் தம்முடைய நூறுபேர் கொண்ட பெரும்பான்மையுடன் இங்கிலாந்திலிருந்து இடதுசாரி அரசியலை' ஒழித்துக்கட்டத் தயாராகிறது. பெருவெற்றி-பெருந் தோல்விக்கு வழிவகுக்கலாம்.

### லண்டனில் இரு பிரதமர்

இலங்கைப் பிரதமர் நாட்டின் ஆட்சித்தலைவர் அல்ல; பிரிட்டிஷ் பிரதமர் ஆட்சித் தலைவர். இருப்பினும் இருவரும் பிரதமரென்பதால் சந்திப்பு சுவைபெறுகிறது.

சர்வதேச கட்டிடக் கலைஞருக்கு ஒரு மகத்தான பேச்சை நிகழ்த்திய பிரதமர் பிரேமதாச ஒரு கோடி வீடு அமைக்கும் திட்டம் எவ்வாறு சாத்தியமென்பதை விளக்கி லண்டனில்கூடியிருந்த கட்டிட நிபுணரின் பெரும் பாராட்டைப் பெற்றிருக்கிறுர்.

முற்றத்தில் முல்லை மணக்காது என்பதுபோல இத்தகைய தலைவர் நாட்டின் தவப்புதல்வனை இலங்கை தக்கவாறு மதிப்பதில்லைபோல் தோன்றும்

அது என்னவாலுனும், பிரிட்டிஷ் பிரதமர் சேர்ச்சில் இரண்டாவது உலக யுத்தத்தின் வெற்றிக்கு ஒரு சிற்பி யுத்தம் முடியுமுன்னரே பிரிட்டிஷ் மக்கள் பதவியிலிருந்து இறக்கிவிட்டதன் காரணம்; சமாதானத்தில் அவருக்கு அதிக வேலையில்லை என்பதே.

திரு. பிரேமதாசா இலங்கையில் நடைபெறும் போர் பற்றி கொண்ட கருத்து; ஒவ்வொருவரும் தனது துறையில் தான்திறமைகொள்ள முடியும் - அதனைக்கடந்தால் அபாயம். எவ்வாறு சேர்ச்சில் இந்தியாவுக்கு சுதந்திரம்வழங்கலாகாதுஎன்று பிடிவாதமாக நின்றுரோ அதேபோல் இன்று இலங்கைப் பிரதமர் பிரேமதாசா இன்றைய இனப்பிரச்னையிலிருந்து பிரிக்கமுடியாத இந்தியாவை புறக்கணித்து வருகிறுர்.

### பாரிஸ்

"லயனின் (லயன் பிரெஞ்சு நகர்)கசாப்புக்கடைகாரன்என வர்ணிக்கப்பட்ட பார்பி 40 வருடங்களுக்குமுன்னர்"மனித குலத்திற்கு எதிரான குற்றங்களை செய்ததற்காக" ஆயுட்கால சிறைவாசம், அந்த வழக்கை விசாரணை செய்த நீதிமன்றம் இன்று தீர்ப்பளித்திருக்கிறது. ஹிட்லரின் ஆணையைச் செயற்படுத்தி பல்லாயிரம் யூதர்களை - சிறப்பாக குழந்தைகளை கொலை செய்த குற்றம் தண்டனைக்குள்ளாகியிருக்கிறது.

பொலியாவில புகலிடம் தேடியிருந்த நாஜி ரகசிய பொலிஸ்அதிகாரியான பார்பி பிரான்ஸ் கொண்டுவரப்பட்டு இரண்டு மாதகாலமாக விசாரணைக்குட்படுத்தப்பட்டார்.

முற்பகல் செய்யின் பிற்பகல் விளையுமென்பது40 வருடங்கள் எடுத்திருந்த போதும் அப்பாவி மக்களைக்கொன்று குவிக்கும் அரசு, அறத்தின் தண்டனைக்கு விதிவிலக்காகாது என்பதை நிரூபிக்கிறது.

### இந்திய உபகண்டம்

கொந்தளிப்பில் தொடரும் இந்திய உபகண்டத்துக்கு சார்க் நிறுவனம் ஒன்றுதான் நன்மையளிக்கவல்லது

இந்தியாவில் பாகிஸ்தானில் பங்களாதேஷில் உள்நாட்டு ஸ்திரமின்மை தொடர்கின்றது இந்தியாவின் ராஜீவ் ஆட்சிக்கெதிராக கங்கணம் கட்டும் எதிர்கட்சிகள் ஜனுதிபதி தேர்தலை முதற்படியாக நம்பியிருந்தனர். அது எதிர்பார்த்ததிற்கு மேலாக ஏமாற்றம் அளித்தது.

(5-ம் பக்கம் பார்க்க)

## மக்கள் பலமே மணிலாவிலும், சியோலிலும் நல்ல முடிவு ஏற்படுத்தியிருக்கிறது. மக்கள்பலத்தை தடுக்க இறைவனாலும் முடியாது

### மணிலா

நாட்டை சூறையாடிய மார்க்கோசை பிலிப்பைன்ஸ் மக்கள் வெளியேற்றினர். திருமதி அக்கினு ஆட்சி மக்கள் பலத்தில் தங்கியிருக்கின்றது இன்றும் அமைதியீனம் தொடர்ந்த போதிலும் அதனை முறியடிக்க திருமதி அக்கினேவிற்கு ஆதரவு அதிகரித்து வருகிறது.

முடியிழந்த 'மன்னன்' மார்க்கொஸ் ஹவாயிலிருந்து திரும்பிவரச்சதிசெய்த காரணத்தால் அமெரிக்கா அவரை அங்கேயே தடுப்புக்காவலில் வைத்திருக்கிறது.

பிலிப்பைன்ஸ், தென் கொரிய இரண்டும் அமெரிக்காவின் ஆப்த நண்பர். இரண்டிலும்'ஜனநாயகம்' நிறுவவும் அதிலும் மேலாக கம்மியூனிசம் வேர்கொள்ளாது தடுக்கவும் அமெரிக்க ராணுவ உதவி உட்பட பல்வகைகளிலும் உதவிவந்தது.

அமெரிக்காவின் திறந்த பொருளாதாரம் பிலிப்பைன்ஸில் வெற்றிகொள்ள வில்லை இயற்கை வளம் பெற்ற நாடு பஞ்சப்பட்டிருந்தது. மக்கள் ஜனநாயகத்திலும் மேலாக பொருளாதார வளர்ச்சி தொழில்விருத்தி, வேலைவாய்ப்புக்காக திரண்டெழுந்தனர். ஆனல் தென்கொரியாவின் பொருளாதாரம் நன்றய் இருக்கிறது. எந்த அபூர்வமான பொருள்களையும் ஐரோப்பாவிற்கு ஏற்றுமதி செய்யும் ஆற்றல் பெற்ற மக்கள் ஜனுதிபதி சுண்டுஹானின் சர்வாதிகாரத்துக்கு அடிபணிவதெப்படி? மக்கள் எதிர்ப்புவலுப்பெற்றது நிவாரணம் கிட்டிவிட்டது.

## எங்கள்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

ஊழல் ஆட்சியென்று ராஜீவ் மேற் குற்றம் சாட்டும் இயக்கம் உண்மையைதக்க முறையில்வெளிப்படுத்தியபின் அதன் உக்கிரத்தை இழக்கும். இதனை விடகட்சியில் காணப்படும் உடபகையை வேரோடுகிளருவதற்கு ராஜீவின் செல்வாக்கு பலம் பெறவேண்டியுள்ளது. துணிவுடன் செயற்பட்டால் விலகும் பிரமுகர்களும் விலக்கப்படும் பிரமுகர்களும் கட்டக்கூடிய கோபுரம் கந்தாசியாலமையுமென நம்ப இடமுண்டு. புதிய ஜனாதிபதி ஆர். வெங்கட்ராமன் உட்பகையை ஒழிக்க உதவுவாரென்று நம்பப்படுகிறது.


## பாகிஸ்தான்

ஆட்சிக்கெதிரான கட்சிகள் ஸியாவின் பத்து வருட ராணுவ ஆட்சிக்கு முடிவுகட்ட முயல்கின்றன அதற்கு தூபமிட்டுக்கொன்டிருப்பவர் முன்னைநாள் ஜனாதிபதி பூட்டோவின் மகள் செல்வி பெனுசிர்பூட்டோ அமெரிக்க உதவி பாகிஸ்தானுக்கு அதிகம் கிடைப்பதால் அதன் ராணுவபலம் உபகண்டத்துக்கே சவாலாகவிருக்கிறது அப்கான்பிரச்னை முடிவடைந்தால் அமெரிக்க ராணுவஉதவி பாகிஸ்தானுக்கு தொடருமென்பது சந்தேகம்.

## பங்களாதேஷ்

டாக்காவில் இன்று நடைபெறும் கலவரங்களுக்கு ஜெனரல் எர்ஷாத் நடத்தும் 'ராணுவ' ஆட்சியே காரணம். எதிர்க்கட்சிகளுக்கு ஊக்கமளிப்பவரே முன்னைநாள் தலைவர்முஜிப்ரகுமானின் புதல்வி ராணுவ தளபதிகள், சிவில் ஆட்சிக்கு உடன்படுவது முடியாதகாரியம். மக்கள் எதிர்ப்பு மலைபோல் வந்தால் தான் விடுதலை கிட்டும்.

## 31-ம் நாள் நினைவஞ்சலி



**செல்வ. பத்மநாதன்**

(உதவி முகாமையாளர் மக்கள் வங்கி, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்)

அன்னைமடியில்: 22-11-1943

ஆண்டவன் அடியில்: 24-06-1987

பாசத்தின் பிறப்பிடமாய், குடும்பத்தின் குலவிளக்காய், பல்கலையும் கற்றுப் பதவியிலே உயர்ந்து நின்றீர், தஞ்சம் நீரென்று தரணியிலே நாம் வாழ்ந்தோம், நெஞ்சம் புண்ணாக்கி நெடுந்தூரம் சென்றீரே, பாரினிலே உம் இழப்பு எமக்குத் தாங்கொணுப் பேரிழப்பு மண்ணில் நாம்மடியும்வரை நிலைத்திருக்கும் உம்நினைப்பு, சிரித்த உம்முகம் தேடி அலைகின்றோம் நாமிங்கே, தவிக்கும் எம்முகம் பார்த்து மீண்டும் வந்துதிக்க மாட்டீரோ, உங்கள் பாத மலர்தூவப் பதமான மலரெதுவும் இப்பாரினிலே இல்லையே, உங்கள் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம். உமது பிரிவால் துயருறும்:

தந்தை, மனைவி, பிள்ளைகள், சகோதரிகள், மைத்துனர்கள், உற்றார், உறவினர், நண்பர்கள்.

[சி 9996]

## அவசரகாலநிலை நீடிப்பு

(கொழும்பு)

தற்போது அமுலிலிருக்கும் அவசரகாலநிலை மேலும் ஒரு மாதகாலம் நீடிக்கப்பட்டுள்ளது. பாராளுமன்றறில்நேற்று இது தொடர்பான விவாதம் இடம்பெற்று வாக்களிப்பு நவடபெற்றபோது 110 பேர் ஆதரவாகவும் 3 பேர் எதிராகவும் வாக்களித்தனர்.

83-ம்ஆண்டுமேமாதம்முதல் அவசரகாலநிலை தொடர்ச்சியாக அமுலிலிருந்து வருவது தெரிந்ததே.

இதேவேளை மீண்டும் பதவியேற்றுள்ள கொழுப்பு வடக்கு பாராளுமன்ற உறுப்பினர் திரு. வின்சென்ட் பெரேரா நேற்று பாராளுமன்றல் பதவியேற்ருர். (ஊ)

## சுமுகநிலை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சீமெந்துக் கூட்டுத்தாபன சீமெந்து ஆலை, லங்காசீமெந்து லிமிட்டட்சீமெந்துஆலை ஆகிய வற்றைச் சேர்ந்த தொழிலாளர்கள் யாவரையும் நேற்றுக்காலை 9 மணிக்கும் 10 மணிக்கும் இடையில் மாவிட்டபுரம் ஊடாகவேலைக்குவருமாறு இத்தொழிற்சாலைகளின் பொது முகாவமயாளர்கள் வானொலி மூலமும் பத்திரிகைகள் மூலமும் அறிவித்தல் விடுத்திருந்தது தெரிந்ததே.

இந்த அறிவித்தலைத்தொடர்ந்து மல்லாகம் பழம்பிள்ளையார் ஆலய முன்றலில் லங்கா சீமெந்து லிமிட்டெட் தொழிலாளர்களும், சுன்னுகம் ஐயனார் கோவிலடி முன்றலில் சீமெந்துபொது தொழிலாளர் யூனியனைச் சேர்ந்தவர்களும் நேற்றுக்கூடி ஆராய்ந்தனர்.

சீமெந்து ஆலை இயங்குவதற்கு ஏதுவாக சீமெந்து ஆலை எல்லைக்குள் எவ்வித இடைஞ்சலும் ஏற்படுத்தப்படமாட்டாது என இராணுவ உயர் பீடம் அறிவித்துள்ளதாக கூட்டத்தில் பிரஸ்தாபிக்கப் பட்டது.

இருந்தபோதும் தெல்லிப் பழைக்கு அப்பால் தொழிற்சாலை வரைசென்றுவருவதற்கு எவ்வித உத்தரவாதமும் இல்லாமையால் வேலைக்கு சென்று வருவது உயிருக்கு ஆபத்து ஏற்படுத்தக்கூடியது. என தொழிலாளர்கள் சுட்டிக்காட்டினர்.

சீமெந்து ஆலை இயங்குவதற்கு முன்னேடியாக அச்சுற்றுடலில் பொதுமக்களை குடியமர்த்தி அவர்கள் சாதாரணமாக சென்றுவரக்கூடிய சூழ்நிலை உருவாகுல் தொழிலாளர்களும் வேலைக்குச் செல்லமுடியும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

அந்நிலையில் துறைமுகத்திற்கு கொழும்பிலிருந்து ஊழியர்களை கொண்டுவந்தது போன்று சீமெந்து ஆலைக்கும் ஏற்படலாமா எனவும் அச்சம் தெரிவிக்கப்பட்டது இறுதியில் சுமுகநிலை ஏற்படும்வரை வேலைக்கு செல்வதில்லையென்றும் வேலைச்குச் செல்வதற்கான சாதகமான வழிமுறைகளை ஏற்படுத்த தொடர்ந்தும் முயற்சிகளை மேற் காள்வதெனவும் கருத்துத்தெரிவிக்கப்பட்டது.

## கமிஷன்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கவின் உறவினர்கள் காயமடைந்தவர்கள், பொதுமக்கள் ஆகியோர் சாட்சிமளிப்பார்கள்.

இன்று காலையில் ஆரம்பமாகும் அலஸ்கமிஷன் இன்று முழு நாளும் நடைபெறவுள்ளது (ஓ)

## அலஸ்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். போதனு வைத்திய சாலையில் விழுந்து வெடித்த ஷெல் துண்டுகளை வைத்திய சாலைப் பணிப்பாளர் டாக்டர் நச்சினார்க்கினியர் திரு. அலஸிடம் காண்பித்தார்.

மார்ச் மாதம் 30-ம் திகதி கோட்டையிலிருந்து ஏவப்பட்ட ஷெல் விழுந்து வெடித்து ஒன்பதுபேர் இறந்த வார்ட்டான 19-ம் வார்ட்டை திரு. அலஸ் உன்னிப்பக்க பார்வையிட்டார்

சகல வார்ட்டுக்களையும் பார்வையிட்ட அலஸ் மார்ச் 30ம் திகதி இடம்பெற்ற ஷெல் தாக்குதலினுல் காயமடைந்து இடது காலையும், கையையும் இழந்து 5-ம் வார்ட்டில் தொடர்ந்து சிகிச்சை பெற்று வரும் கல்வியங்காட்டு வாசியான சதாசிவம் கணேசன் (60 வயது) என்பவரைச் சந்தித்து தனது முதலாவது விசாரணையை நடத்தினுர்.

இவரின் விசாரணையைத் தொடர்ந்து யாழ். போதனு வைத்திய சாலையிலிருந்து வெளியே வந்த அலஸ் கார் மூலம் மணிக்கூட்டு கோபுரம் வரை அழைத்துச் செல்லப்பட்டார்.

காரில் மணிக் கூட்டுக் கோபுரம் வரை சென்ற அலஸ், அரசாங்க அதிபர் மற்றும் அதிகாரிகள் தொடர்ந்து தமது பயணத்தை மேற்கொள்ள அஞ்சியதால் மணிக்கூட்டுக் கோபுரத்துடன் திரும்பி யாழ்நகர் வந்தனர்.

திரு. அலஸிடம் கமிஷன் விசாரணை பற்றி நிருபர்கள் சந்தித்து உரையாடியபொழுது இக் சமிஷன் பற்றி கருத்து தெரிவிக்கவிரும்பவில்லை என்று கூறினுர்.

இருந்தபோதும் கொழும்பில் நடந்த விசாரணைபோல் இங்கும் விசாரணைகள் அந்தரங்கமாக நடைபெறும் என்று கூறினுர். (ஓ)

## தமிழீழ

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைக்காக தமது உயிரை அர்ப்பணித்திருந்தனர் இன்று வரையான எமது வீரஞ்செறிந்த போராட்டத்தில் நாம் 617 போராளிகளை இழந்துள்ளோம். ஆனுல் இத்தகைய ஒருகுறுகிய காலத்தில் உலகில் எந்தஒரு விடுதலைப் போராட்டமும் பெற்றிராத வளர்ச்சியை நாம் பெற்றுள்ளோம்.

இந்தமண்ணின் மீட்புக்காக தமதுயிரை அர்ப்பணித்த போராளிகளினதும் மக்களினதும் தியாகங்களின்மேல் தமிழீழமக்களாகியநாம் ஓர்உறுதி எடுப்போம். 'தமிழீழ தனியரசை நிறுவ நாம் ஒவ்வொருவரும் எமது உயிர் உடல்ஆன்மாவை அர்ப்பணித்துப் போராடுவோம்.' (வா)

## இருபோராளிகள் வீரமரணம்

யாழ்ப்பாணம், வெள்ளி

ஆரையம்பதியில்நேற்றுமுன் தினம் படையினருடன் ஏற்பட்ட மோதலின்போது விடுதலைப்புலிகளைச் சேர்ந்த 2ம் லெப்டினன்ட் விவே படையினரின்சூட்டிற்கிலக்காகி மரணமானுர்.

செட்டிக்குளத்தில்படையினருடனன நேரடி மோதலில் படையினரின் சூட்டுக்கிலக்காகிய போராளி மதி (இ. ஜெயபாலன்) சயனைட் அருந்தி மரணமானுர். இச்சம்பவமும் நேற்றுமுன்தினம் இடம் பெற்றது.

இவர்களிருவருக்கும் தமிழீழ விடுதலைப்புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

## நாலாவது நினைவஞ்சலி





| எஸ். சரவணமுத்து | க. கலாபரமேஸ்வரன் |
|---|---|
| தோற்றம்: 19-4-1901 | தோற்றம்: 2-8-1944 |
| மறைவு: 24-7-1983 | மறைவு: 25-7-1983 |

திதி: 10-8-1987

தங்களது ஆன்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்

| | |
|---|---|
| மனைவி, மக்கள், | மனைவி, மக்கள், தந்தை, |
| மருமக்கள், | சகோதரர்கள், மைத்துனர், |
| பேரப்பிள்ளைகள். | மைத்துனியர். |

இலக்குமிபதி, பலாலிவீதி, திருநெல்வேலி.

சி-9997


### A/L 89 விஞ்ஞான மாணவர்கட்கு

பௌதிகவியல்: ஆரம்பம் 01-08-87
Sat & Sun 12-30—1-30
ஆசிரியர் மணியம் BSc

பொது இரசாயனம்: ஆரம்பம் 25-07-87
Sat & Sun 10-45—11-45
ஆசிரியர் நாகரட்ணம் BSc

மணல்தரை லேன், திருநெல்வேலி. சி-9983

### மேசன் வேலை பயிற்சி

இளைஞர்களை தகைமையும் திறமையும் உள்ள மேசன் தொழிலாளர்களாக்க புதிய கட்டிட நிர்மாண முறைகளில் நேரடிப்பயிற்சி அளிக்கப்படுகின்றது வெளிநாட்டு வேலை வாய்ப்புப்பெறும் தகுதியில் பயிற்சி நெறிகள் அமைந்துள்ளன.

22 வயதுக்குட்பட்ட இளைஞர்கள் உடனடியாக விண்ணப்பிக்கவும் / உடன் வரவும்.

பயிற்சி ஆரம்பம்: 29-07-87

பயிலுனருக்கு ரூபா 10/- —30/- வரை நாளாந்தப்படி வழங்கப்படும்.

பணிப்பாளர்,
யாழ்ப்பாண கல்லூரி தொழில்நுட்ப நிறுவனம்,
வட்டுக்கோட்டை.

### KEEN CENTRE

88, பலாலி ரோட், திருநெல்வேலி.

| | | | |
|---|---|---|---|
| | | | வெள்ளி |
| விலங்கியல் | — | திரு. நாகநாதன் | 6-30 |
| தாவரவியல் | — | திரு குகாதரன் | 5-00 |
| பௌதீகவியல் | — | திரு. சத்தியசீலன் | 4-00 |
| | | | சனி |
| இரசாயனவியல் | — | திரு. சத்தீஸ் | 5-00 |
| தூய, பிரயோக கணிதம் | — | திரு. ஈசன் | 11-30 |

ஆரம்பம்: வெள்ளி 4-00

88 A/L புதிய பிரிவு ஆரம்பம் 1-8-87

[எ-1955]

### BECON

[ஸ்ரீதர் சினிமா முன்பாக]
யாழ்ப்பாணம்.

89 A/L

| | | | சனி, ஞாயிறு |
|---|---|---|---|
| தூய பிரயோக கணிதம் | | திரு. நல்லையா | 8-30 |
| பௌதிகம் | — | திரு. மணியம் | 7-15 |
| இரசாயனவியல் | — | திரு. சண் | 10-15 |
| தாவரவியல் | — | திரு. சர்வானந்தா | 12-30 |
| விலங்கியல் | — | திரு. தம்பிராஜா | 1-30 |

ஆரம்பம்: 25-7-87 (சனி)

88, 89 A/L

கலை, வர்த்தகம்

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | திரு. வரதராஜன் |
| கணக்கியல் | — | திரு மரியதாஸ் |
| வர்த்தகம் | — | திரு. ரட்ணம் |
| அளவையியல் | — | திரு. S S மனேகரன் |
| இந்துநாகரீகம் | — | திருமதி அருள்நங்கை |
| 89 A/L | — | சனி 9 மணி |
| 88 A/L | — | சனி 8 மணி |

88 A/L பகல் நேரவகுப்பு - திங்கள் 7-30

[ஏ-1954]

# நிவாரண உதவி இன்னும் பலருக்கு கிடைக்கவில்லை

## முகாம்களில் அகதிகள் தவிப்பு

### வடமராட்சி அகதிகள் – 9

கச்சாய் மகாவித்தியாலய பழைய பாடசாலைக் கட்டடத்தில் சுமார் 25 குடும்பங்கள் தங்கியிருந்தன 100 பேர் வரை இருந்தனர் இவர்கள் நெல்லியடித் தாக்குதலுக்குப் பின் புறப்பட்டு கடற்கரை பாதை வழியாக வந்துசேர்ந்தவர்கள். வயோதிபர், சிறுவர் பெண்கள், இளைஞர்களும் இருந்தனர்

நாலு பக்கத்தாலும் 'ஷெல்' வந்து விழுந்து வெடித்ததாலும், தொடர்ச்சியான ஹெலி தாக்குதலினாலும் இக் குடும்பங்கள் வெளியேறின.

புலோலி வத்தனையைச் சேர்ந்தவர் செ. பரஞ்சோதி. வயது 54 விவசாயி. இவருடன் மற்றவர்களும் புறப்பட்டு வல்லிபுரக் கோவிலுக்கு சென்று தங்கி அங்கிருந்து கடற்கரை பகுதியால் குடத்தனைக்குச் சென்று வரணி வந்து சேர்ந்தனர் பின் அங்கிருந்து கச்சாய்க்கு வந்தனர்

### அகதிகளுக்கு அரிசி

ஒரு மூடையில் அரிசி வந்திருந்தது நல்ல கறுப்பன் அரிசி வழக்கம் போல் இளைஞர்கள் கொடுத்திருந்தனர். முகாம் பொறுப்பாளர் திரு. எஸ் சிதம்பரநாதன் அவற்றை அங்கு தங்கியுள்ள அகதிகளுக்கு வழங்கிக் கொண்டு இருந்தார்.

இந்திய நிவாரணம் இவர்களுக்கு இன்னும் கிடைக்கவில்லை. அரச நிவாரணம் கூடக் கிட்டவில்லை. இளைஞர்களின் உதவி தான்.

இளைஞர்கள் தினமும் வழங்கும் அரிசி சமான்களைத் தவிர வேறு எந்த உதவியும் எமக்கு கிடைக்கவில்லை என்று முகாம் பொறுப்பாளரே தெரிவித்தார்.

இந்திய உணவுக் கப்பல்கள் வந்து பல வாரங்கள் கடந்து விட்டன பாதிக்கப்பட்ட பலருக்கு இன்னும் நிவாரணம் கிடைக்கவில்லை. விநியோகம் சரியான முறையில் நடைமுறைப் படுத்தப்படவில்லை. அதனுல்தான் இந்தக் குறைபாடு இங்கு மட்டுமல்ல வேறு பல இடங்களிலும் இன்னும் இந்திய நிவாரணம் வழங்கப்படவில்லை. இந்தியா தாமதமில்லாமல் உணவுக் கப்பல்களை அனுப்பிக் கொண்டு இருக்கிறது கடைசியாக வந்த கப்பலும் பொருட்களை இறக்கி விட்டது. ஆனுலும் நிவாரணம் பலருக்குக் கிடைக்கவில்லை. யாழ். குடாநாட்டில் இந்தநிவாரணப் பொருட்களை விநியோகம் செய்வதற்குப் பொறுப்பாக இருப்பவர்கள் உடன் கவனம் செலுத்த வேண்டும். தாமதத்தைத் தவிர்க்க வேண்டும்.

### காலி சென்ற கதை

புலோலியைச் சேர்ந்த பரஞ்சோதி தன் மகனைப் பார்ப்பதற்கு காலிசென்று வந்தகதையையும் சொன்னுர். இவரது மகன் குமரேசன் வயது 18. படையினர் மகனைப் பிடித்துக் கப்பலில் காலிக்கு அனுப்பி விட்டனர். இந்தக் கப்பலில் 1700 வடமராட்சி இளைஞர்கள் அனுப்பப்பட்டனர். 4000 பேர் பிடிபட்டனர் விசாரணையின் பின் 2000 பேர் விடுவிக்கப்பட்டனர் பருத்தித் துறையிலிருந்து கப்பலில் இவர்கள் ஏற்றப்பட்டனர். 5 நாள் பயணம் கப்பலில் அரைருத்தல் பாண் மட்டும் தான்.

குமரேசன் இத்தகவலைத் தெரிவித்து ஏறும் போதும் இறங்கும் போதும் தலையாட்டி மனிதர் நின்றதாகக் கூறினுர்.

'தலையாட்டி யார் என்று தெரியுமா?' என்று கேட்டேன

தெரியாது முகமூடி அணிந்திருந்தார் என்ருர்.

இரண்டு டவை விசாரணை நடைபெற்றதாகவும், சி ஐ.டி. விசாரித்ததாகவும் கூறினுர்.



உணவுக்குக் காத்திருக்கின்றனர்.

### எத்தனை அடையாள அட்டை

தேசிய அடையாள அட்டை காலி முகாம் அடையாள அட்டை இப்போ புலோலி முகாம் அடையாள அட்டை, இன்னும் எத்தனை எத்தனை அடையாள அட்டைகளோ தெரியவில்லை இவற்றைவிட பாடசாலைஅடையாளஅட்டை தபால்கந்தோர் அடையாள அட்டை என்றுதனியாகமாணவர்களிடம்இருக்கின்றன இவற்றையெல்லாம் பாதுகாப்பகா வைத்திருப்பதுதான் பெரும் சங்கடம்.

விசாரணை எப்படி நடந்தது! என்று கேட்டேன்.

மேலிடத்திலிருந்து எங்களை சீக்கிரம் விடுதலைசெய்யுமாறு உத்தரவு வந்திருந்தது. உடன் அவசரஅவசரமாக விசாரணையை முடித்துக்கொண்டு பலரை விடுதலைசெய்து அனுப்பினுர்கள் அதில் நானும் வந்து விட்டேன்'' என்ருர்.

இவரை காலியில் பார்ப்பதற்கு தந்தை பரமசோதி சென்றிருந்தார். புதிய இடம் சிங்களம் தெரியாது பிள்ளைப் பாசத்தால் பயணத்தை அங்கு மேற்கொண்டார் உதவிக் அங்கு ஒருவரைசேர்த்து காலியைஅடைந்தார் உதவிக்கு சென்றவருக்கு சிங்களம் தெரியும்.

காலி பொலிஸ்நிலையத்திற்கு சென்றபோது எவரும் உதவ முன்வரவில்லை என்று பரஞ்சோதி தெரிவித்தார்.

அங்கு என்ன நடந்தது? என்று கேட்டேன் 'நான் மகனைப்பற்றி விசாரித்தபோது அவர்களில் ஒருவர் என்னைச் கூட்டிச்சென்று கதவிற்கும் சுவருக்கும் இடையில் நிறுத்தினுர். ஏதோ நடக்கப் போகிறதென்றுபயந்தேன் அப்போது என்னுடன் வந்தவர் சிங்களத்தல் கதைகக என்னை விட்டுவிட்டர்கள்'என்ருர்.

### பொலிஸ் அதிபர் உதவி

''பின் எங்கு சென்றீர்கள்?''

''காலி பொலிஸ் அதிபரை சந்தித்தேன். அவர் மிகவும் நல்லவர். தேவையான உதவிகளை உடனுக்குடன் செய்தார். அங்கு வேறு சில தமிழ்ப்பெண்களும் தங்கள் பிள்ளைகளைப்பார்க்க வந்திருந்தனர். பொலஸ் அதிபர் அவர்களுக்கு உடனடியாக தேவையான உதவிகளை செய்தார். உடன் தடுப்பு முகாமிற்கு தொடர்பு கொண்டு எனமகன் பற்றி விசாரித்தார். காலித் துறைமுக முகாமில் தாங்கள் தடுத்து வைககப்பட்டிருந்ததாகவும் கூறினுர்.

'அங்த என்ன சாட்பாடு?' என்று கேட்டேன்

'காலையில் பாண், மத்தியானம் சோறு'என்ருர்.

ஒருதடவை அமைச்சர் லலித்தன் பாரியார் முகாமிற்குப் பார்க்க வந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

இவருக்கு ஒரு அடையாள அட்டையும் வழங்கப்பட்டிருந்தது. அதனையும் காட்டினுர் தேசிய அடையாள அட்டை போல்தான் ஆனுல் பெரிய படம்.

விசாரணை முடிந்துவிட்டதாகவும், அடையாள அட்டை நாளைக்கு கொடுக்கப்படுமென்றும் அதன் பின் விடுதலைசெய்யப்படுவாரென்றும் முகாமிலிருந்து தகவல் கிடைத்தது.'' என்ருர்.

''நீங்கள் மகனுடன் வந்தீர்களா?''

''இல்லை நான் போனது போல் பிறம்பாக வந்தேன். மகனைச் சில தினங்களில் கப்பலில் கூட்டிவந்து புலோலி முகாமில் விட்டார்கள்'' என்ருர்.

கச்சாய் முகாமில் இருயுவதிகள் அகதிகள் பெயர்களைபதிவு செய்வதில் ஈடுபட்டிருந்தனர். பெயர்கள் எல்லாம் ஒழுங்காக இருந்தது. இந்த முகாமிற்கு செஞ்சிலுவைச்சங்கத்தினர்ஒரு தடவை வந்திருந்ததாக அகதிகள் தெரிவித்தனர் ஆனுல் நிவாரணம் இன்னும் கிடைக்கவில்லை.

சிலர் சுகவீனமாக படுத்திருந்தனர் சிகிச்சை வசதிகள் எதுவும் இல்லை. மருந்துகள் கிடையாது. டாக்டர்களும் வருவதில்லை இதேபோன்று

**கா. யோகநாதன்**

தான் நான் சென்ற எந்த முகாமிலும் சிகிச்சை வசதிகள் கிடையாது.

### பாலாவி அகதிகள்

பாலாவி அகதிகள் முகாமில் நீர்வசதி மிகவும் குறைவு. முகாமைச்சுற்றியுள்ள வீடுகளில் பல அகதிகள் தஞ்சமடைந்துள்ளனர். ஒரு வீட்டில் ஐந்தாறு குடும்பங்கள் தங்கியுள்ளன. கரவெட்டியைச் சேர்ந்தவர் ஆ செல்லன். இவர் குடும்பத்தில் 8 பேர். தாக்குதலுக்கு பயந்து கால் நடையாகப் புறப்பட்டு இங்கு வந்துள்ளனர். இம்முகாம் பொறுப்பாளர் திரு. ஆர். பொன்னுத்துரை, தேவையான உதவிகளை செய்துவருகின்ருர். கச்சாய் பகுதியில் அகதிகள், தேவாலயங்கள், மாவட்ட சபை, சச்சாய் உப அலுவலக கட்டடம், கோவில்கள் சன சமூக நிலையங்கள், நூல்நிலையங்களிலும் அகதிகள் தங்கியுள்ளனர்.

(தொடரும்)


ஓர் அரிய

**பெரிய சந்தர்ப்பம்**

**மீண்டும் வழமைபோல் வெளிநாடு செல்லமுடியும்.**

★ ஜேர்மனி
★ பிரான்ஸ்
★ பெல்ஜியம்
★ நோர்வே
★ கனடா

AUCTIONERS & BROKERS

உடனடியாக தாமதமின்றித் தொடர்புகொள்க.

ஏனைய வசதிகளும், ஒழுங்குகளும் செய்யப்படும்.

எங்கள் ஏனைய சேவைகள்:

★ எல்லா நாடுகளுக்கும் பிரயாண ஒழுங்குகள்.
★ துரிதமான பாஸ்போட், விசா, பொன்ட் ஒழுங்குகள்.
★ CONFIRMATION, RECONFIRMATION and CANCELLATION.
★ இந்தியப் பயணத்தில் விசேட வசதிகள்.

**MACK COMMUNICATIONS AND TRAVELS,**

இல. 8, முதலாவது ஒழுங்கை, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

TELE:- 24791, 24836.

[சி-1946]


## இன்றைய பலன்

திகதி: 08 - ஆடிமாதம்
திகதி (24 - 07 - 87)
கிழமை: வெள்ளி
திதி: சதுர்த்தி
நட்சத்திரம்: திருவாதிரை

மேடம்: நடுநிலைதவருது நல்லதைச் செய்வீர்கள். உறவுகளில் முன்னேற்றமுண்டு. உயர்வுக்கும் வழி பிறக்கும். சுபதினம்.

இடபம்: தவறுகள் நடக்கலாம் நிலையும் தடுமாறும். காதல் விவகாரமும் தலைதூக்கும்.

மிதுனம்: எடுத்தகாரியத்தில் தாமதம் ஏற்படும் வீண் பழியும்கேட்க நேரிடும் பொறுமையுடன் இருக்கவும்.

கடகம்: கொள்கைவழி குடும்பத்தை வளம்படுத்தும் நண்பர்களாலும் உதவியுண்டு திடீர் பிரயாணம் ஒன்றும் மேற்கொள்ளப்படலாம்.

சிங்கம்: முன்னேற்றம் தடைப்படும் உஷ்ணரோகமும் தென்படப்பார்க்கும் குடும்ப சச்சரவுகளும் தலைதூக்கும்.

கன்னி: குடும்ப முன்னேற்றம் உண்டு பொருள் விருத்தியுண்டு புதுமனை கட்டவும் ஆலோசிப்பர் மகிழ்ச்சிகரமான தினம்.

துலாம்: உத்தியோகச்சிறப்புமுண்டாம். டாக்டர்களுக்கு நன்னுள் புத்திரர் வழியிலும் உதவி கிட்டும்.

விருச்சிகம்: துன்பத்தின் நிழலாட்டம் உங்களைப்பின் தொடரும். வீணுனபகையும் தோன்றலாம் எதிலும் பொறுமை விரும்பத்தக்கது.

(7ம் பக்கம் பார்க்க)

# யாழ். தினசரிகளின் தந்தையான கே. ஸி. தங்கராசா அவர்கள்

யாழ்ப்பாணத் தமிழ்த்தினசரிகளின் தந்தையான வான திரு. கே. ஸி. தங்கராசா அவர்கள் காலமாகி நம்முள் நின்றுவிட்டார். இவருடைய தமிழ் சைவப் பற்றுல் தோன்றியதே 'ஈழநாடு'' நாளிதழ் தமிழை யும் சைவத்தையும் பேணவும் வளர்க்கவும் மதுரையில் 'தமிழ்நாடு' நாளிதழைத் தொடங்கிய கலைத்தந்தை கருமுத்து தியாகராசச் செட்டியார்போல் ஈழத்தில் தங்கராசா அவர்கள் ஒரு கண்ணிக்குந்யதையாவார் அன்பு, பண்பு, அடக்கம் என்பவற்றின் 'அர்த்த புரு ஷன்' புல்லுச்சிலு 'பாககால்நடைபோல் சொல்லுச் சிலும்பா நாநடையுடையவர் எதையும் எண்ணி யெண்ணிச் சொல்பவர் - செய்பவர். ஈழநாடு பண் ணையைச் சேர்ந்த பத்திரிகாசிரியர்களே ஈழமுரசு கோபுவும், முரசொலி திருச்செல்வமும் உதயன் கான மயில்நாதனும் ஆவர். இவர்களுடன் வேறுபல பத்தி ரிகையாளர்களையும் வளர்த்த பெருமையும் தங்கத் தாத்தாவுக்கு உண்டு. இவரை 'பெரியவர்' என்றே பத்திரிகைத்துறையினர் கூறுவர்.

ஈழநாடு அலுவலகத்திற்கு ஒருநாள் நான் போன போது நண்பர் பெருமாள் பெரியவருக்கு என்னை அறி முகப்படுத்திஞர். பாதாதிகேச கேசாதிபாதமாக ஏற இறங்கப்பார்த்தார். ஆளை அளக்கும் பார்வை அது. ஈழத்தில் யுத்தகாண்டம் தொடங்கிய காலமாதலால் என்ன நடக்கப்போகிறது என்று என்னைக்கேட்டார். சொல்லத்தெரியவில்லை என்றேன் எப்பவோ முடிந்த காரியம் ஒரு பொல்லாப்புமில்லை என்ற யோகசுவாமி களின் வாக்கியங்களைக் கூறியபடி சிரித்தார்.

ஏசுவார்கள் எரிப்பார்கள் அஞ்சவேண்டாம் உண் மையை எழுதுங்கள் உண்மையாய் எழுதுங்கள் என்ற யோகரின் வாக்கியத்தை தாரகமந்திரமாகக் கொண்ட ஈழநாடு ஏச்சும் வாங்கியது. எரிவையும் பெற்றது. இரண்டையும் ஜீரணித்துக்கொண்டு தன் கடன்பணி செய்துகிடப்பதே என்று நடந்து கொண் டிருக்கிறது. இந்த இயல்புகளை இதற்கு வளர்த்த பெரியவர் மறைவு பெரும்பேரிழப்பே இதற்கு ஈடுதேட இறைவனை வேண்டுவோம்.

— புலவர் ஈழத்துச்சிவானந்தன்.

## அமரர் கே. ஸி. தங்கராசாவுக்கு
# தேசியகடதாசி கூட்டுத்தாபன ஊழியர்கள் அஞ்சலி

[illegible]மட்டக்களப்பு, வியா

தேசிய கடதாசிக் கூட்டுத் தாபனத்தின் முன்னுள் தலைவர் திரு. கே. ஸி. தங்கராசாவின் மறைவையொட்டி மேற்படி கூட்டுத்தாபனத்தின் வாழைச் சேனை காகித ஆலையில் நேற்று முன்தினம் இரங்கல் கூட்டம் நடைபெற்றது.

பெருந்தொகையான ஆலைத் தொழிலாளர்கள் கலந்து கொண்ட இக்கூட்டத்தில் ஆலை முகாமையாளர் இ. கணபதிப் பிள்ளை அமரர் தங்கராசா வின் உருவப்படத்திற்கு மலர் மாலை அணிவித்தார்.

அங்கு நடைபெற்ற இரங்கல் கூட்டத்தில் இ. கணபதிப் பிள்ளை பேசுகையில் கூறியதா வது:

இலுக்குப்புல்லை மூலப்பொரு ளாகக்கொண்டு இயங்கும் காகித ஆலையொன்றை வாழைச்சேனையில் அரசு நிர் மாணித்தபின்னர் இலுக்குப் புல் போதியளவு கிடைக்காத காரணத்தால் இந்த ஆலையை மூடிவிட அரசு தீர்மானித்தது இதை ஒரு சவாலாகஏற்று வைக்கோலை மூலப்பொருளா கப் பயன்படுத்தி இக்காகித ஆலை தொடர்ந்து இயங்குவ தற்கு மூலகாரணமாக இருந்த வர் அமரர் தங்கராசா.

நாளொன்றுக்குப் பன்னி ரண்டு தொன்னுக இருந்த காகித உற்பத்தியை முப்பத் தைந்து தொன்னுக அதிகரிக்க வழிசெய்ததுடன் மேலுமொரு பிரமாண்டமான அட்டை இயந்திரப் பகுதியையும் எம் பிலபிட்டிய ஆலையையும் ஸ்தா பிக்க நடவடிக்கை எடுத்தவர் அன்னுரது சேவைக்காலம் கட தாசிக் கூட்டுத்தாபன சரித்தி ரத்தில் ஒரு பொற்காலமாகும்.

## 51,000 அகதிகளுக்கு உடுபிடவை
### விநியோகம்

யாழ்ப்பாணம், வெள்ளி.

வடமராட்சி, வலிகாமம் ஆகியபகுதிகளிலிருந்து பாதிக் கப்பட்டு தென்மராட்சியில் தங்கியுள்ள மக்களில் 51,000 பேருக்கு உடுபிடவைகள் தம்மால் வழங்கப்பட்டுள் ளதாகவும், இதுவரை உடு பிடவைகள் பெற்றுக் கொள் ளாதவர்கள் தம்முடன் தொடர்பு கொள் ளுமாறும் அகதிகள் புனர் வாழ்வு அமயம் வேண்டு கோள்விடுத்துள்ளது.

மேலும் இப்பகுதியிலுள்ள அகதிகளுக்கு தமிழர் அகதி புனர்வாழ்வு அமையம் (பி. ஆர். ஆர் ஓ) ஆறுயிரம் நீலசோப்புகளையும் ஆறுயிரம் லைபோய் சோப்புக்களையும் வழங்கியுள்ளதாகவும் புனர்வாழ்வு அமையம் தெரி வித்துள்ளது.

## இன்றைய பலன்
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தனுசு: காதல் வாழ்வு கனியும் பொன்னுன வாழ்வும் பெண்ணுலே கிட்டும் கடமை யும் சிறக்கும்.

மகரம்: புதிய முதலீடுகூடா வாம். புதியநண்பர்களாலும் தொல்லைகள் உருவாகும். பெண்கள் அவதானம் வேண் டும்.

கும்பம்: பிதாவழியில் பிணி யும் நீங்கும் தெய்வசிந்தை மேலிடும். குடும்பத்திலும் சுமுகமான நிலை தென்படும்.

மீனம்: உத்தியோக உயர்வு உண்டு. வருமான விருத்தி யுண்டு. சுபகருமம் ஒன்றும் மேற்கொள்ளப்படலாம்.

திருமலை
வே. ரவீந்திரன்

## பலத்த சோதனை
(கொழும்புத்துறை நிருபர்)

நெல்லியடி. முள்ளி, கலிகைச் சந்திப் பகுதிகளில் நேற்று இராணுவம் கடும் சோதனை யை மேற்கொண்டது.

வல்லையிலுள்ள பால மொன்று பலத்த குண்டுவெ டிப்புடன் தகர்ந்ததையடுத்து இராணுவத்தினர் தீவிர ரோந்து நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.



அகில இலங்கை கம்பன் கழகத்தினர் கடந்த வாரம் யாழ்ப்பாணத்தில் நடத்திய கம்பன் விழாவின்போது திரளாகக் கூடியிருந்த மக்கள் மத்தியில் கழகப் பிரமுகர் திரு. ஜெயராஜ் உரையாற்றிக்கொண்டிருக்கிறுர்.

## க. பொ. த. உயர்தர பரீட்சையில்
# பல்கலைக்கழகம் தெரிவாகும் மாணவர்களுக்கு பரிசில்கள்

யாழ்ப்பாணம், வெள்ளி

கல்வி ஊக்குவிப்புத் திட்டத் திட்டத்தின்கீழ் வாரிவளவு நல்லியக்கசபை நடைபெற விருக்கும் க. பொ. த. [உயர் தர] பரீட்சையில் சித்திபெற்று பல்கலைக்கழக அனுமதிபெறும் காரைநகர் மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கி கௌரவிக்க வுள்ளது.

இதன்படி பரீட்சையில் நாலு அதிவிஷேட சித்திபெறும் மாணவர்களுக்கு 1500 ரூபா வும், பொறியியல், மருத்துவ பீடத்திற்கு தெரிவாகுபவர் களுக்கு 1000ரூபாவும், நிர்மாண கலைமுகாமைத்துவம், வர்த்தக பீடத்திற்த தெரிவாகுபவர்க ளுக்கு 500 ரூபாவும் வழங்க விருக்கிருர்கள்.

கடந்தபல வருடங்களாக வாரிவளவு நல்லியக்க சபை கல்வி, கலை, கலாசார நிகழ்ச்சி களை நடாத்தி பரிசில்கள் வழங்கி வருவதும் குறிப்பிடத் தக்கது. (சி)


THANKS

Grateful Thanks
to
Jesus Christ
Mother Mary
and
Holy St. Jude
for
Blessings and
Favours received.

Roh-Vi

[சி-9988]



ஓராண்டு நினைவஞ்சலி



வித்துவான்
வீ. கதிரவேலு
(அரியாலையூர் யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய ஓய்வுபெற்ற ஆசிரியர்.)
இகம்: 10-06-1916
பரம்: 04-08-1986

முப்பதோடாறு ஆண்டுகள் முதல்வனுய் கடமை, கட்டுப்பாடு, கண்ணியத்துடன் நின் குடும்பத்தை உயர்த்திய பெருமமூத்த புதல்வியின் அகால மரணம் ஏற்படுவதற்கு இரு மாதங்களுக்கு முன், அதைத்தாங்க வலுவின்றியோ முன்னர் ஏகினை சுவர்க்கம். நின் நினைவி னின்றும் என்றும் நீங்காத

குடும்பத்தினர்.

முள்ளி,
அரியாலை,
யாழ்ப்பாணம்.
24-07-87 சி-9974



4-வது ஆண்டு நினைவஞ்சலி



திரு. சின்னப்பு
சத்தியேஸ்வரன்
மலர்வு: 07-10-1951
உதிர்வு: 25-07-1983

தவப்புதல்வா! தியாகச்சுடரே! எங்கள் உயிர்த் தம்பி! நீ பிறந்த நின் நாட்டைக் காக்க கொடிய சிறை சென்று அக்கொடிய வெஞ் சிறையில் உன் உயிரையே இழந்தாயே! கள்ளங் கபடமற்ற பால் வடியும் உன் ஜோதி முகத்தைப் பார்க்க ஏங்குதடா எம் நெஞ்சம். நாங்கள் உனக்கு மணமாலை சூட்டிப்பார்க்கக் காத்திருக்கும் வேளையிலே, நீ பிணமாலைதானும் சூடாமல் அநாதரவாக எங்களை விட்டுப்பிரிந்து சென்றதேனே! எங்கள் உயிர் எங்களை விட்டுப் பிரியும்வரை உன் நினைவால் உருகும்:

அன்பு பப்பா, அம்மா அக்காமார், தங்கை, தம்பிமார், மைத்துனர்கள், மருமக்கள்.

'திருத்தணிகை',
அச்சுவேலி வடக்கு,
அச்சுவேலி. (சி 9992)



வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க



4ம்–ஆண்டு நினைவஞ்சலி



அந்திரேஸ்பிள்ளை
விமலதாசன்
பிறப்பு: 17-01-1954
இறப்பு: 24-07-1983

இவர்மூலமாகஇறைவன் நமக்களித்த நன்மைகளுக்காக 25-07-87 காலை 6-30 மணியளவில் பண்டத்தரிப்பு பத்திமாதா ஆலயத்தில் நன்றித் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

தாய், சகோதரர், சகோதரிகள்.

''பத்திமாகிரி'',
பண்டத்தரிப்பு.
சி-9993



4–வது ஆண்டு நினைவஞ்சலி



அமரர் சின்னையா
சிவானந்தன்
(ஆனந்தன்)
(மனேஜர்
ரதி வாட்ஸ் வேக்ஸ்,
யாழ்ப்பாணம்.)
மலர்வு: 13-02-1943
உதிர்வு: 24 07-1983

காலங்கள் மாறினுலும்-கூட இருந்தோர் மறந்தாலும் எம் உயிர் உள்ளவரை நாம் உமை மறவோம்.

பிரிவால் வாடும்:

மனைவி, பிள்ளைகள்: நிஷாந்தி, பிரசன்ன, சிந்துஜா.

'நிஷாந்தி வாசா',
131/1, பலாலி ரோட்,
திருநெல்வேலி.
(சி 9997)



நீதியரசர் அலஸ் முன்னிலையில், நேற்று யாழ். கச்சேரியில் சாட்சியமளித்த பேராசிரியர் வித்தியானந்தன், டாக்டர் சிவராசா உட்பட பொதுமக்கள் சிலரையும் இப்படத்தில் காணலாம்.

(படங்கள்: "தேவா")

காங்கிரஸ் மகாசபையில்—

# இலங்கையில் நடக்கும் கொடுமைகள் பற்றி இளைஞர் கென்னடி பிரஸ்தாபம்

## மனிதஉரிமை மீறல்களை தடுத்துநிறுத்த வலியுறுத்து

[நியூயார்க்]

இலங்கை அரசு மேற்கொண்டுவரும் மனித உரிமை மீறல்களை நிறுத்தும்படியும், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தை அங்கு செல்ல அனுமதிக்கும்படியும் வற்புறுத்துமாறு அமெரிக்க காங்கிரஸ் சபை உறுப்பினர் ஜோசப் பி. கென்னடி வற்புறுத்தியிருக்கின்றார்

காங்கிரஸ் மகா சபைக்கு மாசசூசெட்ஸ் மாநிலத்திலிருந்து தெரிவு செய்யப்பட்டுள்ள இவர், முன்னாள் ஜனாதிபதி ஜோன் எப் கென்னடி குடும்பத்திலிருந்து அரசியலில் புகுந்துள்ள புதிய உறுப்பினராவார். மாசசூசெட்ஸ் மாநிலத்தில் இலங்கைத் தமிழர்கள் பெரு எண்ணிக்கையில் வாழ்ந்து வருகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது

திரு. கென்னடி காங்கிரஸ் மகாசபையில் இலங்கைத் தமிழர் பற்றி 'போஸ்ரன் குளோப்' என்ற பத்திரிகை எழுதியுள்ள ஆசிரியர் தலையங்கத்தை தாக்கல் செய்து பேசினார்

இலங்கைத் தமிழர்களின் கஷ்டங்கள் குறித்தும் இரத்தம் சிந்தல் குறித்தும் அமெரிக்க அரசு அதிக அக்கறை எடுத்துக்கொள்ளவில்லையென அப்பத்திரிகை எழுதியிருப்பதை திரு. கென்னடி சுட்டிக் காட்டினார்.

"ஒரு ஜனநாயகத்தின் சகல பிரஜைகளுக்கும் உள்ள பிரதிநிதித்துவம், சமஉரிமைகளில் உறுதியான நம்பிக்கை கொண்டது நமதுநாடு, எனவே இலங்கையில் இடம்பெற்று வரும் உள்நாட்டுக் கலவரத்தின் மிருகத்தன்மையைப் பற்றி அதிகமாக நாம் அறிந்து கொள்ளவேண்டும்' எனஅவர் தெரிவித்தார்.

'இலங்கையில் நடைபெறும் வன்செயல்கள் அவசியமற்றவை. மேற்கொண்டு அங்கு இரத்தம் சிந்தல் ஏற்படாத வகையில் இருதரப்பும் ஏற்றுக்கொள்ளக் கூடியதான அரசியல் சூழ்நிலையொன்று உருவாக்கப்பட வேண்டும்' என அவர் மேலும் தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி ஜோன் எஃப் கென்னடியின் சகோதரர் ரொபர்ட் கென்னடியின் புதல்வரான ஜோசப் கென்னடி புதிதாக காங்கிரஸ் சபைக்கு தெரிவுசெய்யப்பட்டுள்ள இளைஞராவார்.

இவரது சிறியதந்தையும் ஜோன் எஃப் கென்னடியின் இளையசகோதரருமான டெட் கென்னடி செனட்டராக இருந்து வருகின்றார். கடந்த வருடம் இலங்கை ஜனாதிபதிக்கு செனட்டர் கென்னடி எழுதிய கடிதம் ஒன்றில் இனப்பிரச்னைக்கு நீண்டகால தீர்வு ஒன்றை காணும்படி வற்புறுத்தியிருந்தார்.

## விபரம் சேகரிப்பு

(நமது நிருபர்)

திருகோணமலையிலிருந்து இடம் பெயர்ந்து வந்துள்ள அகதிகளின் விபரங்களை இன்று 24ம் திகதி முதல் மூன்று நாட்களுக்குள் திரட்டுவதற்கு திருகோணமலை மாவட்ட அகதிகள் நலன்புரிச்சங்கம் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

நல்லூர், யாழ்ப்பாணம் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் சங்கிலியன் புனர்வாழ்வு முகாமிலும், சாவகச்சேரி உதவிஅரசஅதிபர் பிரிவிலுள்ளவர்கள் அறவழிப் போராட்டக் குழுவின் பணிமனையிலும் மற்றைய உதவி அரச அதிபர் பிரிவிலுள்ளவர்கள் அந்தந்த பிரிவிலுள்ள உதவி அரச அதிபர் பணிமனையிலுள்ள திருகோணமலை (மாவட்ட) அகதிகள் நலன்புரிச் சங்க தொண்டர்களிடமும் காலை 9 மணிக்கும் பிற்பகல் 4 மணிக்குமிடையில் பதிவுசெய்து கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

## சுவீடன் தூதுவர் இன்று யாழ் விஜயம்

யாழ்ப்பாணம், வெள்ளி

இலங்கையிலுள்ள சுவீடன் நாட்டுத்தூதுவர் இன்றுயாழ்ப்பாணம் வருகைதரவுள்ளார்.

யாழ் வருகைதரும் இவர் யாழ் அரசாங்க அதிபர், செஞ்சிலுவைச்சங்க பிரதிநிதிகள்: பிரஜைகள் குழுக்களைசந்தித்து கலந்துரையாடுவார் எனத் தெரியவருகிறது. (ஓ)

## வடமராட்சி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இப்பொருள்கள் யாவும் புனர்வாழ்வு பிரதிப் பணிப்பாளர் திரு ஆர். யோகநாதனின் தலைமையில் சகல மக்களுக்கும் விநியோகிக்கப்படும் என அவர் கூறினார். பின்வரும் பொருள்களே அங்கு அனுப்பிவைக்கப் பட்டுள்ளன.

அரிசி 1,39,400 கிலோ, மா 1,73,400 கிலோ சீனி 1,31.750 கிலோ, புளி 8500 கிலோ, பால்மா 17,000 கிலோ, பருப்பு 26, 350 கிலோ, கொடி எண்ணெய் 17,000 லீற்றர், மண்ணெண்ணெய் 17,000 லீற்றர். தீப்பெட்டி 17, 000 டசின்.

இதனைவிட முன்பும் அரிசி 89.100 கிலோ, மா 34.650 கிலோ, சீனி 39.000கிலோ, பருப்பு 1000 கிலோ, கொடி எண்ணெய் 1776 லீற்றர் மண்ணெண்ணெய் 7600 லீற்றர், தீப்பெட்டி 1800 டசின் ஆகிய பொருள்கள அனுப்பிவைக்கப் பட்டனவென அவர்தெரிவித்தார்.

முதற்தடவையாக அனுப்பிவைக்கப்பட்ட பொருள்கள் தமக்கு முழுமையாக விநியோகிக்கப்படவில்லையென பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். நெல்லியடி மகாத்மா தியேட்டரில் இப் பொருள்கள் களஞ்சியப் படுத்தப்பட்டிருந்ததாகவும, அங்கு நடைபெற்ற சில அசம்பாவிதங்களால் அப் பொருள்கள் பொதுமக்களுக்கு முழுமையாக விநியோகிக்கப் படவில்லையென்றும் தெரிய வந்துள்ளது.

மேலும் வடமராட்சியிலிருந்து வெளியேறி சாவகச்சேரி கோப்பாய், தெல்லிப் பழை, சங்கானை, சண்டிலிப் பாய், நல்லூர் யாழ்ப்பாணம், உடுவில் ஆகிய இடங்களில் அகதிகளாக உள்ளவர்களுக்கும் இந்திய நிவாரணப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன. (கே)

யாழ் பல்கலைக்கழக—

## மருத்துவபீட மாணவர் நேற்று விரிவுரைகளை பகிஷ்கரித்தனர்

யாழ்ப்பாணம், வெள்

கொழும்பு தனியார் மருத்துவக்கல்லூரி தொடர்பாக கொழும்பு மருத்துவபீடமாணவர்கள் மற்றும் அரசாங்க வைத்தியர் சங்கம், இதர தொழிற்சங்கங்கள் நடத்தும் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து யாழ் பல்கலைக்கழ மருத்துவ மாணவர் நேற்றுத் தமது விரிவுரைகளைப் பகிஷ்கரித்தனர்.

யாழ் பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்களின் நேற்றைய பகிஷ்கரிப்பைத் தொடர்ந்து இன்று பகிஷ்கரிப்புடன் மறியல்போராட்டம் ஒன்றையும் நடத்தவுள்ளனர்.

யாழ் பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர் ஒன்றியத்தினரால் நடாத்தப்பட விருக்கும் இப்போராட்டம் தொடர்பாக இன்று காலை யாழ் பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் கூட்டம்ஒன்றும்நடைபெறவுள்ளது. (வா)

## இந்திய

1-ம் பக்கத் தொடர்ச்சி]

த்து, இதனை இந்தியப்பிரதமருக்குத் தெரிவிப்பதற்கும், மேலும் ஆலோசனை நடத்துவதற்கும் இந்திய உயர் ஸ்தானிகர் திரு. ஜே என் டிக்ஷித் இன்று புதுடில்லி செல்லவுள்ளாரென நேற்று இலங்கை வானொலி அறிவித்தது

எனினும் இலங்கை அரசாங்கப்பாராளுமன்றக் குழுவின் அங்கீகாரம் பற்றியோ, அல்லது பிரதமர் காந்தியின் இலங்கை விஜயம் பற்றியோ இந்தியா எதுவித தகவலையும் வெளியிடவில்லை.

அரசாங்கப் பாராளுமன்றக் குழுவின் அங்கீகாரத்தையடுத்து கருத்துந் தெரிவித்த தேசிய பந்தோபஸ்து அமைச்சர் லலித் அதுலத் முதலியும் இனப்பிரச்னை தீர்வுக்கான நல்ல அறிகுறி தோன்றியுள்ளதாகக் கூறியுள்ளார். (வா)

## பூரி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை நேற்று முன்தினம் ஜனாதிபதி ஜயவர்த்தனவைச் சந்தித்த இந்தியத் தூதர் திரு. ஜே என் டிக்ஸித் இலங்கை அரசினால் சமர்ப்பிக்கப்பட்ட இறுதி யோசனை சம்பந்தமாக இந்தியாவின் கருத்தை எடுத்துக் கூறியுள்ளார்.

சுமார் 90 நிமிடங்கள்வரை நீடித்த இந்த சந்திப்பின் போது இந்திய வெளியுறவுச் செயலர் திரு. கே பி. எஸ். மேனன் புதிய யோசனை குறித்து போராளிகள் குழுக்களிடமும், தமிழர் விடுதலைக் கூட்டணியினரிடமும் பெற்ற கருத்துக்களையும் ஜனாதிபதி ஜயவர்த்தனவிடம் திரு. டிக்ஸிட் எடுத்து விளக்கிக் கூறினார்.

இது இவ்வாறிருக்க, வடக்குக் கிழக்குப் பகுதிகளிலுள்ள இராணுவத்தினரை வாபஸ் பெற்று முகாமுக்குள் வைத்திருந்தால் மட்டுமே பேச்சுவார்த்தை நல்லதீர்வு ஒன்றுக்கு இட்டுச் செல்லுமென தமிழீழ விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளதாக இந்திய வானொலி நேற்று அறிவித்தது.

## மரண அறிவித்தல்

### பொன்னம்பலம் நடராசா (காட்டர்)

கொக்குவில் ஆடியாமடத்தைச் சேர்ந்த ஓய்வு பெற்ற புகையிரதத் தலைமைப் பாதுகாவலர் [Head Guard] திரு பொன்னம்பலம் நடராசா 22-07-87 புதன்கிழமை காலமாகிவிட்டார் இவர்காலஞ்சென்ற பொன்னம்பலம் செல்லம் தம்பதிகளின் மூத்தமகனும் தங்கச்சியம்மாவின் அன்புக்கணவரும், கமலாதேவி, சச்சிதானந்தன் [முகாமையாளர் சசிகாமென்ஸ் உடுவில்], சரோஜினிதேவி, சுலோசனாதேவி, விவேகானந்தன் [ஜெர்மனி] ஆகியோரின் அன்புத்தந்தையும், சுப்பிரமணியம் [கணக்காளர், நொடைப் பொருட்கள் கொள்வனவுத்திணைக்களம்], இந்திராணி, தெய்வேந்திரன் [கணக்காளர் அரசாங்கஅச்சகம்], தம்பாபிள்ளை [ஆசிரியர் மானிப்பாய் இந்துக்கல்லூரி], இராசபூபதி [ஜெர்மனி] ஆகியோரின் அன்பு மாமனாரும், துரைராசா [மலேசியா], காலஞ்சென்ற மகாராசா, காலஞ்சென்ற இராஜேஸ்வரி, தேவராசா [இளைப்பாறிய புகையிரதநிலைய அதிபர்] ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற இராசையா, பரமேஸ்வரி, இரத்தினப்பிரகாசம் [மேலதிக பணிப்பாளர் மத்திய வங்கி], நடராசா [கணக்காளர் கொழும்பு திட்டஅலுவலகம்], சுப்பிரமணியம் [மேற்பார்வையாளர் C. G E. E. அல்ஸ்தம்] ஆகியோரின் மைத்துனரும், அழகேசன் [இந்தியா], ஆதித்தன் [இந்தியா], முகுந்தன் [இந்தியா] அரவிந்தன், மஞ்சுளா, கணேசராஜன், அம்பாலிகா, ஞானசீர்த்திமீநிலங்கோ, ஜெர்மிலா ஆகியோரின் அன்புப்பாட்டனுமாவார். அன்னாரின் இறுதிச் சடங்குகள் அவரதுஇல்லத்தில் நாளை 25-07-87 சனிக்கிழமை காலை 8-00 மணிக்கு நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக கொக்குவில் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: ந. சச்சிதானந்தன் [மகன்]
கொக்குவில்.

சி-10000

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1987-ம் ஆண்டு ஜூலை மாதம் 24-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/10036/81 Eelanadu. P. O. Box 49 Telegram, Eelanadu. Telephone, — 22389, 24126.